விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 123 வள்ளுவர் ஆண்டு 2056 சித்திரை 08 திங்கட்கிழமை (21.04.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829



மும்பை வெற்றி பக்கம் 4

பெண்கள் போல் வேடமணிந்து

## இணுவில் மஞ்சத்தடி முருகன் தேர்த் திருவிழாவில் திருட்டு

### நான்கு பேர் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் இணுவில் மஞ்சத்தடி முருகன் ஆலயத் தேர்த்திருவிழாவில் பெண்கள் போல் வேடமணிந்து திருட்டில் ஈடுபட்ட மட்டக்களப்பைச் சேர்ந்த நான்கு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இணுவில் 15ஆம் பக்கம் பார்க்க

## யாழ்ப்பாணம் தும்பளையில் பெண் அடித்துக் கொலை

### களவுக்குச் சென்ற இளைஞன் கொடூரம்

(கரணவாய்)

யாழ்ப்பாணம் தும்பளையில் தனிமையிலிருந்த பெண் ஒருவர் அடித்துப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

தும்பளை மாம்பிரம்பற்றை வீதியில் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க



## தபால் மூல வாக்களிப்பு

### நான்கு நாட்கள் மாத்திரமே இடம்பெறும்

(கொழும்பு)

தபால் மூல வாக்களிப்பு ஏப்ரல் 24, 25, 28 மற்றும் 29ஆம் திகதிகளில் மாத்திரமே இடம்பெறும் எனத்தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

நேற்றுத் தேர்தல்கள் ஆணைக்குழுவால் வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,4)

அதிகாரத்தைக் கைப்பற்றவே

# ஈஸ்டர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது

### பொலநறுவையில் ஜனாதிபதி அநுர

(பொலநறுவை)

அரசியல் அதிகாரத்தைக் கைப்பற்ற மேற்கொள்ளப்பட்ட மிகப்பெரிய பயங்கரத் தாக்குதல் ஈஸ்டர் தாக்குதல் என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)



பிரதமரின் வருகையை முன்னிட்டு

## நெடுங்கேணியில் மின்சாரம் துண்டிப்பு

### பிரதேச மக்கள் குற்றச்சாட்டு

(நெடுங்கேணி)

தேர்தல் பிரசாரத்திற்காக நெடுங்கேணிப் பிரதேசத்திற்கு நேற்று பிரதமர் சென்றிருந்த நிலையில் பட்டிக்குடியிருப்பு மற்றும் ஒலுமடு பிரதேசங்களுக்கான மின் விநியோக 15ஆம் பக்கம் பார்க்க

## சாவகச்சேரியில் விபரீத முடிவெடுத்த குடும்பஸ்தர் மரணம்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரியில் விபரீத முடிவெடுத்த குடும்பஸ்தர் ஒருவர் 15ஆம் பக்கம் பார்க்க

## இனவாத அரசியலில் ஈடுபட்டவர்கள் தற்போது குழப்பமடைந்துள்ளனர்

### பிரதமர் ஹரிணி அமரசூரிய

(வவுனியா)

இனவாத அரசியலில் ஈடுபட்டவர்கள் தற்போது நிர்க்கதியான நிலையில் குழப்பமடைந்துள்ளனர் என பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

வவுனியா நெடுங்கேணி கலாசார மண்டபத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற தேசிய மக்கள் சக்தியின் பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே பிரதமர் இதனைக்

16ஆம் பக்கம் பார்க்க






15ஆம் பக்கம் பார்க்க

## வடமராட்சி உடுத்துறையில் வாள்வெட்டுத் தாக்குதல்

### குடும்பஸ்தர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி கிழக்கு உடுத்துறையில் இடம்பெற்ற வாள்வெட்டுத் தாக்குதலில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று மாலை இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இதில் ஆழியவளையைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவரே படுகாயமடைந்துள்ளார்.

இருவருக்கிடையில் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதில் இந்தச் சம்பவம் பதிவாகியுள்ளது.

15ஆம் பக்கம் பார்க்க

## தேர்தல் பிரசாரத்தில் ஜனாதிபதி வெளியிட்ட சர்ச்சைக் கருத்து

### தேர்தல்கள் ஆணைக்குழு இன்று கூடுகின்றது

(கொழும்பு)

தேர்தல் பிரசாரத்தின் போது ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க வெளியிட்ட சர்ச்சைக் கருத்துத் தொடர்பில் ஆராய தேர்தல்கள் ஆணைக்குழு இன்று திங்கட்கிழமை கூடவுள்ளது.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க மன்னார் பிரதேசத்தில் வெளியிட்ட கருத்தொன்று தொடர்பாகக் கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் குறித்து விசாரணை நடத்துவதற்காக தேர்தல்கள் ஆணைக்குழு கூடவுள்ளது.

ஜனாதிபதி கடந்த நாளொ


16ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

பிறப்பு 22 - 07 - 1945



இறப்பு 20 - 04 - 2025

## நடராசா இராசேந்திரா

(ஓய்வு பெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர், நீர்ப்பாசனத் திணைக்களம்)

சங்கரத்தை வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் கல்லைவேம்படி சுழிபுரத்தை வதிவிடமாகவும் கொண்ட நடராசா இராசேந்திரா அவர்கள் நேற்று 20.04.2025 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நடராசா - பத்மாவதி தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான முத்துகுமாரு - விசாலாட்சி தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற இரத்தினேஸ்வரி அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான தவராசா, ராஜராணி மற்றும் லலிதாம்பிகை(ஓய்வுபெற்ற விஞ்ஞான ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரனும் பேராசிரியர் வைத்திய கலாநிதி சுரேந்திரகுமாரன் (பீடாதிபதி, மருத்துவபீடம் -யாழ்ப்பாண பல்கலைக் கழகம்), செந்தில்குமரன் (Supervisor, Built Element Ltd - Colombo), சுஜாதா (கொழும்பு), மீரா (பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர் - பிரதேச செயலகம், பருத்தித்துறை) ஆகியோரின் அன்புத் தந்தையும் ரேணுகா (நிர்வாக உத்தியோகத்தர் IMS - மானிப்பாய்), சுதர்சன் (ஆசிரியர் - யா/ விக்னேஸ்வரா கல்லூரி, கரவெட்டி) ஆகியோரின் அன்பு மாமனாரும் அபிநவன், அப்சரா, அருந்திகா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 21.04.2025 திங்கட்கிழமை காலை 8.30 மணியளவில் அவரது இல்லத்தில் (இல.10, வைமன் வீதி, நல்லூர் எனும் முகவரியில்) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

இல.10, வைமன் வீதி,
நல்லூர்.
077 744 8080
077 388 5233
(3978)
தகவல்: குடும்பத்தினர்

# போதை மாத்திரைகளுடன் நுணாவிலில் இளைஞன் கைது

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக் குட்பட்ட நுணாவில் பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இரவு ஆயிரத்துப் பத்து போதை மாத்திரைகளுடன் இளைஞன் ஒருவர் சாவகச்சேரிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.



போதைமாத்திரைகளை மறைத்து வைத்திருப்பதாகப் பொலிஸாருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்னவின் ஆலோசனைக்கு அமைவாக உபபொலிஸ் பரிசோதகர் மயூரன் தலைமையிலான குழுவினர் மேற்படி கைது நடவடிக்கையை முன்னெடுத்திருந்தனர்.

(ம-7,4,30)

## ஈஸ்டர் தாக்குதல்...

பொலநறுவையில் நேற்று நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

அதிகாரத்தைக் கைப்பற்றப் பயன்படுத்தப்பட்ட மிகப்பெரிய பயங்கரமான செயல் 2019 ஈஸ்டர் ஞாயிற்றுக்கிழமை அன்று நடந்தது.

கடந்த ஐந்தரை வருடங்களாக ஈஸ்டர் ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பான விசாரணைகளின் பின்னணியில் உள்ள நோக்கம் உண்மையான சூத்திரதாரிகளை மறைப்பதாகும்.

2019 இல் ஆட்சிக்கு வந்த அரசாங்கத்திற்கும் - அதைத் தொடர்ந்து வந்த அரசாங்கத்திற்கும் - உண்மையான குற்றவாளிகளை நீதியின் முன் நிறுத்தும் நோக்கம் இல்லை.

பதவியேற்ற ஆறு மாதங்களுக்குள், தற்போதைய NPP அரசாங்கம் ஈஸ்டர் ஞாயிறு தாக்குதலில் பாதிக்கப்பட்டவர்களுக்கு பொறுப்புக்கூறல் மற்றும் நீதியை உறுதி செய்வதற்குப் படிப்படியான நடவடிக்கையை எடுத்துள்ளது என்றார்.(ம-4,7)

# மரண அறிவித்தல்

## செல்வி மாலதி அருணாசலம்

(CEB RETIRED SYSTEM OPERATOR, KOLPITTY)



யாழ்ப்பாணத்தைப் (வேலணை, நயினாதீவு) பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி மாலதி அருணாசலம் அவர்கள் நேற்று (20.04.2025) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான அருணாசலம் - கனகாம்பிகை (இராசா) தம்பதியரின் அன்புப் புத்திரியும் ஜெயமலர் (ஓய்வுநிலை உப பீடாதிபதி), மைதிலி (வைத்தியர்), மனோரமா (ஜேர்மனி), மகபதி (ஜேர்மனி), மஞ்சுளா (ஆசிரியர்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் தியாகலிங்கம் (ஓய்வு நிலை அதிபர்), அருளேந்திரன் (வைத்திய நிபுணர்), குகானந்தன் (ஜேர்மனி), விஜிதா (ஜேர்மனி), ஸ்ரீரங்கநாதன் (ஆசிரியர்) ஆகியோரின் மைத்துனியும் ஆரணி (அவுஸ்திரேலியா), தியாசாயனி (ஆசிரியை), மயூரசாகித்தியன் (அவுஸ்திரேலியா), கிருஸ்ணவி, சங்கவி, விஸ்ணவி, வைஸ்ணவி ஆகியோரின் அன்புச் சித்தியும் லுக்சியா, டினுஷன், பவனிகா ஆகியோரின் அன்பு அத்தையும் யதுசன், பிரதாயினி, நந்தகிசோ ஆகியோரின் பெரிய தாயாரும் சேந்தன் (வைத்தியர்), கபிலன் (வைத்தியர்) ஆகியோரின் அன்பு மாமியாரும் தண்மயி, தெய்வீகன், காவியன், ஆத்மன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் தவமணிதேவி (தயா, கனடா), காலஞ்சென்றவர்களான கனகராசா(கனடா), கந்தையா, சாமிநாதன், திருநாவுக்கரசு (வைத்தியர்) ஆகியோரின் பெறாமகளும் காலஞ்சென்ற வரதலிங்கம் (அதிபர்) மற்றும் சரஸ்வதி (லண்டன்) காலஞ்சென்றவர்களான இராசம்மா, மீனாட்சி, வாலாம்பிகை மற்றும் விசாலாட்சி ஆகியோரின் மருமகளுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (22.04.2025) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை மகிந்த மலர்ச்சாலை கல்கிசையில் அஞ்சலிக்காக (பார்வைக்காக) வைக்கப்பட்டு எதிர்வரும் புதன்கிழமை (23.04.2025) காலை 10.00 மணி முதல் கிரியைகள் நடைபெற்று மதியம் 12.00 மணியளவில் தகனக்கிரியைக்காக கல்கிசைப் பொது மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

வெள்ளவத்தை,
கொழும்பு.
(3980)
076 029 1953

# மரண அறிவித்தல்

பிறப்பு 16 - 08 - 1944



இறப்பு 20 - 04 - 2025

## பரமசாமி செட்டியார் செல்வநாதன் செட்டியார்

(ஸ்தாபகர் - R.S PRINTERS JAFFNA,
PAST PRESIDENT - ROTARY CLUB OF JAFFNA,
OLD BOY St.JOHNS COLLEGE JAFFNA )

யாழ். நகரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பரமசாமி செட்டியார் செல்வநாதன் செட்டியார் அவர்கள் நேற்று 20.04.2025 ஞாயிற்றுக்கிழமை அன்று இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பரமசாமி செட்டியார் - ஐயனையம்மாள் தம்பதிகளின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற ரெங்கநாயகி அம்மாள் அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான தையல்நாயகி, நடராசா செட்டியார், ஜெகதீஸ்வரி, சிதம்பரநாதன் செட்டியார், கதிரேஸ்வரி, நகுலராஜா செட்டியார் ஆகியோரின் பாசமிகு இளைய சகோதரரும் யசோகுமார்(கனடா), லலித்குமார் வைத்தியர் (யாழ்), தினேஸ்குமார் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் ஹரிசரண்யா(கனடா), திருசாந்தி(யாழ்.), சௌமிதா(லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனாரும் சனாஜெசி, கிரிராஜினி, ஹிரித்திகா, ஆயுஸ், ஆதியா ஆகியோரின் அன்புப் பேரனு மாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நாளை 22.04.2025 செவ்வாய்க் கிழமை அன்று அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலை 10.00 மணியளவில் வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(C-2759)

103, பலாலி வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம். T.P : 077 413 2012
தகவல் : குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டெங்கு-சிக்குன்குனியா நோய்கள் பரவும் அபாயம்!


## பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கம்

(கொழும்பு)

**தற்போதைய மழையுடனான வானிலை காரணமாக டெங்கு மற்றும் சிக்குன்குனியா நோய்கள் பரவும் அபாயம் அதிகரித்துள்ளதாக இலங்கை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கத்தின் செயலாளர் சமில் முதுகுட தெரிவித்துள்ளார்.**

நீண்ட விடுமுறை மற்றும் பாடசாலை விடுமுறை காரணமாக, பலர் சுற்றுலா சென்றுள்ளமையினால், தங்கள் வீடுகளையும் சுற்றுப்புறத்தையும் அவர்களால் சுத்தம் செய்ய முடியாது போயுள்ளது.

இதன் காரணமாக, நுளம்பு பெருகும் இடங்கள் சுத்தம் செய்யப்படாமையினால் நுளம்புகளின் பெருக்கம் அதிகரித்துள்ளதை அவதானிக்க முடிவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.



டெங்கு மற்றும் சிக்குன்குனியா நோய்கள் ஒரே வகையான நுளம்பால் பரப்பப்படுகின்றன.

இதன் காரணமாக, சுற்றுப்புறத்தைத் தொடர்ந்து சுத்தம் செய்வதன் மூலம் நுளம்புகளின் பெருக்கத்தைத் தடுப்பதற்குப் பொது மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டு வருவதாகவும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்கத்தின் செயலாளர் சமில் முதுகுட தெரிவித்துள்ளார். (6-8)

# பாராளுமன்ற செலவீனங்களை கணக்காய்வு செய்ய அரசு தீர்மானம்

(கொழும்பு)

வெளிப்படைத்தன்மை இல்லாத காரணத்தினால், கடந்த 10 ஆண்டுகளில் இரண்டு அரசாங்கங்களினால் பாராளுமன்றத்தில் மேற்கொள்ளப்பட்ட செலவினங்கள் தொடர்பில் கணக்காய்வு நடத்துவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்பாக அவசரக் கணக்காய்வு அறிக்கையைச் சமர்ப்பிக்குமாறு சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன ஏற்கனவே கணக்காய்வாளர் நாயகத்திற்கு அறிவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 8 மற்றும் 9 ஆம் திகதிகளில் பாராளுமன்றத்தில் செலவினப் பற்றாக்குறை தொடர்பாக எழுந்த பிரச்சினைகள் காரணமாகச் சபாநாயகர் திருப்தி அடையாமையினாலும், கடந்த 10 வருடங்களில் பல தனியார் நிறுவனங்கள் பாராளுமன்றத்தில் கணக்காய்வை நடத்தி வந்திருந்தமையாலும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகச் சபாநாயகர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

அதற்கிணங்க, பாராளுமன்றத்தில் தேவையற்ற செலவுகளைக் குறைப்பதற்கான நடவடிக்கை தற்போது எடுக்கப்பட்டு வருவதாகவும் சபாநாயகர் அலுவலகம் தெரிவித்துள்ளது.

இதனிடையே தற்போது வெற்றிடமாகியுள்ள கணக்காய்வாளர் நாயகம் பதவிக்குப் பொருத்தமான ஒருவரை நியமிப்பதற்காக அரசியலமைப்பு சபை எதிர்வரும் 22 ஆம் திகதி கூடவுள்ளது.

எதிர்வரும் சில நாட்களில் பொருத்தமான ஒருவரின் பெயரை அரசியலமைப்பு சபைக்கு ஜனாதிபதி முன்வைப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது.

கணக்காய்வாளர் நாயகமாகப் பதவி வகித்த டபிள்யூ. பி. சி. விக்ரமரட்ண கடந்த 8 ஆம் திகதி அந்தப் பதவியிலிருந்து ஓய்வு பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (6-8)

# உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள்-2025.05.06

## வாடகை அடிப்படையில் வாகனத்தைப் பெற்றுக் கொள்ளுதல்

எதிர்வரும் 2025.05.06 ஆம் திகதி அன்று நடைபெறவுள்ள உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் தொடர்பான கடமைகளின் போது யாழ்ப்பாண மாவட்டத்தின் நிர்வாக எல்லைக்குள் உள்ளடங்குகின்ற வாக்கெடுப்பு நிலையங்களுக்கு தேர்தல் பணியாட் குழுவினரின் போக்குவரத்து தேவைகளுக்காக தனியார் வாகனங்களை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அதற்கமைவாக வாடகை அடிப்படையில் இரு வித பாவனை (Dual purpose) உடைய 8 தொடக்கம் 14 ஆசனங்களை கொண்ட வான் வாகனத்தை வழங்க விரும்புபவர்களை யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் அமைந்துள்ள உதவித் தெரிவத்தாட்சி அலுவலர் போக்குவரத்து பிரிவில் 2025.04.25 ஆம் திகதிக்கு முன்னதாக பதிவுகளை மேற்கொள்ளுமாறும் யாழ் மாவட்ட தெரிவத்தாட்சி அலுவலர் அவர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ம.பிரதீபன்

தெரிவத்தாட்சி அலுவலா், மாவட்டச் செயலகம், யாழ்ப்பாணம்.

# ரூ.240 மில்லியன் பெறுமதியான போதைப்பொருளுடன் வெளிநாட்டவர் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமான முறையில் நாட்டிற்கு கொண்டு வரப்பட்ட ஒரு தொகை கொக்கேய்ன் போதைப் பொருளுடன் வெளிநாட்டவர் ஒருவர் சுங்க போதைப் பொருள் கட்டுப்பாட்டுப் பிரிவு அதிகாரிகளினால் நேற்றுக் காலை கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட நபர் 29 வயதான பிரேசில் பிரஜை ஆவார்.

அவரிடமிருந்து சுமார் 5 கிலோ கிராம் கொக்கேய்ன் மீட்கப்பட்டுள்ளதுடன். அதன் பெறுமதி 240 மில்லியன் ரூபாய் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

கைப்பற்றப்பட்ட போதைப் பொருள் தொகையும், கைதான நபரையும் மேலதிக விசாரணைக்காக கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸ் போதைப்பொருள் தடுப்புப் பணியக அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (6-8)

## வரிவிதிப்பின் எதிரொலி

# அமெரிக்காவுக்கு நாளை இலங்கை பிரதிநிதிகள் விஜயம்

(கொழும்பு)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விதித்துள்ள புதிய பரஸ்பர வரி குறித்து கலந்துரையாடுவதற்கு இலங்கை பிரதிநிதிகள் குழு நாளை செவ்வாய்க்கிழமை வோஷிங்டனுக்கு விஜயம் மேற்கொள்ள உள்ளதாக தொழில் அமைச்சர் அனில் ஜயந்த குறிப்பிட்டார்.

அமெரிக்க வர்த்தக பிரதிநிதிகளுடனான பேச்சுக்களின் போது வரிகளைக் குறைத்தல் மற்றும் இறக்குமதியை அதிகரித்தல் போன்ற விடயங்கள் குறித்து கலந்துரையாட உள்ளது.

அமெரிக்காவிற்கு இலங்கை ஏற்றுமதி செய்யும் பொருட்களுக்கு 44 சதவீத வரியை டொனல்ட் ட்ரம்ப் ஆரம்பத்தில் விதித்திருந்தார். 64 சதவீத ஆடையுற்பத்திகளை உள்ளடக்கிய இவ்வேற்றுமதிகள் 2023 ஆம் ஆண்டில் கிட்டத்தட்ட 1.8 பில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியைக் கொண்டிருந்தன.

எனவே, அமெரிக்காவின் புதிய வரி விதிப்பினால் இலங்கையின் ஆடைக் கைத்தொழில் துறையானது பாரிய தாக்கத்தை எதிர்கொள்வதற்கான வாய்ப்புக்கள் உள்ளன.

தெற்கு மற்றும் மத்திய ஆசியாவிற்கான அமெரிக்க வர்த்தக திணைக்களத்தின் பணிப்பாளர் எமிலி ஆஷ்பி மற்றும் உதவிப்பணிப்பாளர் பிரெண்டன் லிஞ்ச் ஆகியோருடன் இலங்கை பிரதிநிதிகள் கடந்த வாரம் மெய்நிகர் ஊடான கலந்துரையாடல்களை நடத்தியிருந்தனர். இதில் ஏற்பட்ட முன்னேற்றங்களின் அடிப்படையிலேயே இலங்கை பிரதிநிதிகள் அமெரிக்கா செல்கின்றனர். (6-8)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் அறிக்கை சி.ஐ.டியிடம் கையளிப்பு

(கொழும்பு)

2019 உயிர் த்த ஞாயிறு தாக் குதல்கள் தொடர்பான ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழுவின் அறிக்கை, மேலதிக விசாரணைகளுக்காக சி.ஐ.டியிடம் அதிகாரப் பூர்வமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் உத்தரவின் பேரில், ஜனாதிபதியின் செயலாளரால் இந்த அறிக்கை ஒப்படைக்கப்பட்டதாக பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

2019 ஏப்ரல் 21 அன்று இலங்கையில் பல இடங்களில் 260 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்த மற்றும் நூற்றுக்கணக்கானோர் காயமடைந்த ஒருங்கிணைந்த குண்டுவெடிப்புகள் குறித்து ஆழமான விசாரணைகளைத் தொடர புதுப்பிக்கப்பட்ட முயற்சிகளின் ஒரு பகுதியாக இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (6-8)

# புதிய நுளம்பு இனம் இலங்கையில் அடையாளம்

(கொழும்பு)

இலங்கைக்கே உரித்தான புதிய நுளம்பு இனமொன்று அடையாளம் காணப்பட்டுள்ளதாக வைத்திய ஆராய்ச்சி நிறுவனத்தின் பூச்சியியல் நிபுணர் கயான் குமாரசிங்க தெரிவித்துள்ளார்.

குறித்த புதிய நுளம்பு இனம் மீரிகம பகுதியில் அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நுளம்பு இனமானது, கியூ லெக்ஸ் லொபசெரோமியா சின்டெக்லஸ் என பெயரிடப்பட்டுள்ளது.

குறித்த நுளம்பு இனம் ஒரு முக்கிய வைரஸ் கடத்தியாக அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் வைத்திய ஆராய்ச்சி நிறுவனத்தின் பூச்சியியல் நிபுணர் கயான் குமாரசிங்க தெரிவித்துள்ளார். (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறு மனமே ஆறு...

## சென்னைக்கு ஆறாவது தோல்வி

# மும்பைக்கு ஹட்ரிக் வெற்றி



இந்தியன் பிரீமியர் லீக் போட்டியில் சறுக்கிய சென்னை அணி, 6ஆவது தோல்வியைச் சந்தித்தது. ரோகித் சர்மா, சூர்யகுமார் அரைச்சதம் கடந்து கைகொடுக்க, மும்பை அணி "ஹட்ரிக்" வெற்றியைப் பதிவு செய்தது.

மும்பை, வான்கடே மைதானத்தில் நடந்த இந்தியன் பிரீமியர் லீக் போட்டியில் தலா ஐந்து முறை கிண்ணம் வென்ற மும்பை - சென்னை அணிகள் மோதின.

சென்னை "லெவன்" அணியில் ராகுல் திரிபாதி நீக்கப்பட்டு, 17 வயதான ஆயுஷ் மாத்ரே இடம்பெற்றார்.

நாணயச்சுழற்சியில் வென்ற மும்பை அணியின் தலைவர் ஹர்திக் பாண்ட்யா, பந்துவீச்சைத் தேர்வு செய்தார்.

**துபே அபாரம்:**

சென்னை அணிக்கு ரச்சின் ரவிந்திரா (5) ஏமாற்றினார். அஷ்வனி குமார் வீசிய 4வது ஓவரில் ஒரு பவுண்டரி, 2 சிக்சர் விளாசிய ஆயுஷ் மாத்ரே (32) ஓரளவு கைகொடுத்தார். மற்றொரு ஆரம்ப வீரர் ஷேக் ரஷீத் (19) நிலைக்கவில்லை.

பின் இணைந்த ரவிந்திர ஜடேஜா, ஷிவம் துபே ஜோடி நிதானமாக விளையாடியது. ஆட்டத்தின் 11ஆவது ஓவரை கட்டுக்கோப்பாக வீசிய அணித் தலைவர் ஹர்திக் பாண்ட்யா, 3 ஓட்டங்கள் மட்டும் விட்டுக்கொடுத்தார். போல்ட் பந்தை பவுண்டரிக்கு விரட்டிய துபே, பாண்ட்யா பந்தில் ஒரு சிக்சர் பறக்கவிட்டார். போல்ட் வீசிய 15வது ஓவரில் ஒரு பவுண்டரி, ஒரு சிக்சர் விளாசிய துபே, அஷ்வனி குமார் பந்தில் வரிசையாக 2 சிக்சர் அடித்து அரைசதம் எட்டினார். நான்காவது விக்கெட்டுக்கு 79 ஓட்டங்கள் சேர்த்தபோது பும்ரா பந்தில் துபே (50 ஓட்., 4 சிக்சர், 2 பவுண்டரி) ஆட்டமிழந்தார்.

அடுத்து வந்த அணித் தலைவர் தோனி (4), பும்ராவிடம் சரணடைந்தார். போல்ட் வீசிய கடைசி ஓவரில் ஒரு சிக்சர், ஒரு பவுண்டரி அடித்த ஜடேஜா, 34 பந்தில் அரைச்சதம் கடந்தார். சென்னை அணி 20 ஓவரில் 5 விக்கெட்டுக்களை இழந்து 176 ஓட்டங்கள் எடுத்தது. ஜடேஜா (53 ஓட்., 2 சிக்சர், 4 பவுண்டரி), ஓவர்டன் (4) ஆட்டமிழக்காமல் இருந்தனர்.


**நல்ல ஆரம்பம்:**

சவாலான இலக்கை விரட்டிய மும்பை அணிக்கு ரியான் ரிக்கிள்டன், ரோகித் சர்மா ஜோடி நல்ல ஆரம்பம் கொடுத்தது. கலீல் அகமட் வீசிய முதல் ஓவரில் 2 பவுண்டரி விரட்டினார் ரிக்கிள்டன். ஜேமி ஓவர்டன் பந்தை சிக்சருக்கு அனுப்பிய ரோகித், கலீல் வீசிய 3வது ஓவரில் ஒரு சிக்சர், 2 பவுண்டரி விளாசினார். ஓவர்டன் வீசிய 5வது ஓவரில் இருவரும் தலா ஒரு சிக்சர் அடிக்க 18 ஓட்டங்கள் கிடைத்தது. முதல் விக்கெட்டுக்காக 63 ஓட்டங்கள் சேர்த்த போது ஜடேஜா "சுழலில்" ரிக்கிள்டன் (24) சிக்கினார்.

பொறுப்பாக ஆடிய ரோகித், 33 பந்தில் அரைசதம் எட்டினார். ஜடேஜா வீசிய 9, 11வது ஓவரில் தலா ஒரு சிக்சர், ஒரு பவுண்டரி அடித்த சூர்யகுமார் யாதவ், நூர் அகமது வீசிய 13வது ஓவரில் "ஹட்ரிக்" பவுண்டரி விரட்டினார். அபாரமாக ஆடிய சூர்யகுமார், 26 பந்தில் அரைசதம் விளாசினார். பதிரானா பந்தில் வரிசையாக 2 சிக்சர் பறக்கவிட்ட சூர்யகுமார் வெற்றியை உறுதி செய்தார்.

மும்பை அணி 15.4 ஓவரில் ஒரு விக்கெட்டுக்கு 177 ஓட்டங்கள் எடுத்து 9 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது. (ம-4,7)

# மரண அறிவித்தல்



மலர்வு 10.08.1949

உதிர்வு 18.04.2025

## இராயப்பு பரமானந்தம் (பஞ்சரட்ணம்)

## (ஆனந்தா ஸ்டோர்ஸ் – உரிமையாளர்)

யாழ். சில்லாலையைப் (St. ஜேம்ஸ் வீதி) பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராயப்பு பரமானந்தம் (பஞ்சரட்ணம்) (ஆனந்தா ஸ்டோர்ஸ் - உரிமையாளர்) அவர்கள் (18.04.2025) வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராயப்பு - றோசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான அல்வீனம்மா (பாபா), வினிவிறேற் (றோஸ்) ஆகியோரின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற மேரி திரேசா புஷ்பம் மற்றும் மேரி யோசப்பின் (ராணி), காலஞ்சென்ற மேரி கில்டா (பேபி) மற்றும் அருட் சகோதரி ஜெம்மா (மலர்) (திருச்சிலுவை கன்னியர் மடம்), மேரி லீலா ஆகியோரின் பாசமிகு சகோதரரும் கமில்ரன் அவர்களின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான ஆசீர்வாதம் பிலிப்பையா (ஆசிரியர்), எசாக்கி இம்மானுவேல் (பொலிஸ்), அந்தோனிப்பிள்ளை ஸ்டீபன் (இலங்கை போக்குவரத்துக் களஞ்சியப் பொறுப்பாளர்) மரியாம்பிள்ளை தாசீசியஸ் (கட்டிட ஒப்பந்தக்காரர்) அவர்களின் மைத்துனரும் எல்மோடினேஸ், சுகி அவர்களின் ஞானத்தந்தையும் காலஞ்சென்ற ஐறீன் மற்றும் அன்ரன், டெனி, நொயிலின், அருட்சகோதரி டொறின் (திருகுடும்ப கன்னியர் மடம்), டொறிஸ், பொலின், கிறேஷியன், லைங்ஸ்ரன், (F)வுளோறின், லூமின், கிளிங்ரன், சுஜி, றஜி, ஜெனி, ஜூட்(F)பிளே வியன், (வலய முகாமையாளர் -ஆர்பிகோ இன்சூரன்ஸ் PLC.), ஜெலோன் அவர்களின் அன்பு மாமனாரும் சாந்தி, செல்வராணி, இந்திராணி, ரஞ்சினி, வவி அவர்களின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் எதிர்வரும் (25.04.2025) வெள்ளிக்கிழமை காலை 9.30 மணியளவில் சில்லாலை புனித யாகப்பர் ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு St.ஜேம்ஸ் சேமக்காலை பண்டத்தரிப்பில் நல்லடக்கம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
குடும்பத்தினர்

(3981)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோதமான 1200 சிகரெட்டுக்கள் மீட்பு

## ஒருவர் கைது

(கொழும்பு)

ரம்புக்கனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வகவ பகுதியில் பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் சட்டவிரோதமாகக் கொண்டுவரப்பட்ட சிகரெட்டுக்களுடன் சந்தேகநபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் யடகம பகுதியைச் சேர்ந்த 44 வயதுடையவர் என தெரிய வந்துள்ளது.

சந்தேகநபரிடமிருந்து சட்டவிரோதமாக கொண்டுவரப்பட்ட 1,200 சிகரெட்டுக்கள் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

குறித்த சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (6-8)

# விவசாய உற்பத்திகளை அற்ப விலைக்கு விற்பதை

## அனுமதிக்கமாட்டோம்-ஜனாதிபதி அநுர

(கொழும்பு)

மீண்டும் ஒருபோதும் நெல் விலை தொடர்பில் பிரச்சினை ஏற்படாது என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

பொலநறுவையில் நேற்று இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இங்கு கருத்து வெளியிட்ட ஜனாதிபதி, நெல் களஞ்சியசாலைகள் புதுப்பிக்கப்பட்டுள்ளதோடு, அதற்காக 500 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

சதொச மேலும் நெல் கொள்வனவுக்காக திட்டமொன்றை வகுத்தது. இதை விடக் குறைந்த விலையில் கொடுத்தாலும் பரவாயில்லை, இதை விட அதிக விலையில் கொடுத்தாலும் பரவாயில்லை, ஆனால் அதிக விலையில் அரிசியை விற்பனை செய்ய முடியாது என நாங்கள் சொன்னோம்.

அதற்கு நாங்கள் கட்டுப்பாட்டு விலையை வழங்கியுள்ளோம். குறைந்த விலையிலான அனைத்து நெல்லையும் அரசாங்கம் விலைக்கு வாங்கும். விவசாயிகள் இனி தங்கள் நெல்லை விற்க முடியாது என்று முறைப்பாடு செய்யத் தேவையில்லை. விலைகளை நிலைப்படுத்த அரசாங்கம் தலையிடத் தயாராக உள்ளது.

நெல் விலை குறைந்தால் அதை வாங்குவோம். அதிகரித்தால் அவர்கள் வாங்குவார்கள். அரசாங்கத்துக்கு அவற்றை வாங்கிச் சேமித்து வைக்க வேண்டிய தேவை இல்லை. விவசாயிகளுக்கான நியாயமான விலையை வழங்குவதே எங்களது நோக்கம். அந்தத் திட்டம் வெற்றியளித்துள்ளது. இனி விவசாய உற்பத்திகளை அற்ப விலைக்கு விற்க நாங்கள் ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம். (6-8)

# கப் வண்டி கவிழ்ந்து விபத்து; 8 பேர் காயம்

(கொழும்பு)

ராகலையில் இருந்து அம்பாறையின் சியம்பலாண்டுவ நோக்கி பயணித்த கப் வண்டியொன்று நேற்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் வீதியில் கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில், 8 பேர் படுகாயமடைந்து நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ராகலை, உடுவமதுரவில் உள்ள உறவினர் வீட்டுக்கு வந்த ஒரு குழுவினர் சியம்பலாண்டுவவுக்கு திரும்பிச் சென்று கொண்டிருந்தபோது, வலப்பனை, நில்தண்டஹின்ன அம்பன்வெல்ல பகுதியில் அவர்கள் பயணித்த கப் வண்டியில் திடீரென தடுப்புக் கட்டை (பிரேக்) செயழிழந்ததன் காரணமாக திடீரென வேகக் கட்டுப்பாட்டை இழந்து பிரதான வீதியில் கவிழ்ந்ததில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை வலப்பனை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (6-8)

## கண்ணீர் அஞ்சலி



எமது கல்லூரி புவியியல் பாட ஆசிரியை

செல்வி.வாசுகி கந்தசாமி

அவர்களின் அன்புத் தாய்

அமரர். பத்மலீலாதேவி கந்தசாமி

அவர்கள் 20.04.2025 அன்று இறைபதமடைந்தார்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(சி-2754)

யாழ்.இந்து மகளிர் கல்லூரிச் சமூகம்.

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை முன்னாள் ஆசிரியை

திருமதி.ஜெனனி செந்தில்குமரன்

அவர்களின் அன்புத் தாயார்

அமரர். பத்மலீலாதேவி கந்தசாமி

அவர்கள் 20.04.2025 அன்று இறைபதமடைந்தார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த இரங்கல்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்

யா/பரமேஸ்வரா வித்தியாலயம், திருநெல்வேலி

# இராசிபலன்

21. 04.2025
சித்திரை 08, திங்கட்கிழமை
அட்டமி பிற்பகல் 2.31 மணிவரை
உத்தராடம் முற்பகல் 8.32 மணிவரை

சுபநேரம் 12.01- 1.31 மணிவரை
இராகுகாலம் 7.31.-9.01 மணிவரை
நடேசர் அபிஷேகம்

சந்திராஷ்டமம் - புநர்பூசம்

வளவன்



**மேஷம்** — வருங்கால நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், புதிய முயற்சிகள் கைகூடும், உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், கௌரவமான நாள்.



**கடகம்** — சுப நிகழ்வுகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, நீண்ட நாளைய நண்பர் ஒருவரின் நட்பு இடம் பெறலாம், வீட்டு உபயோகப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு.



**துலாம்** — செல்லும் இடங்களில் சிந்தனை ஆற்றலால் சிறப்படைவீர்கள், காலை நேரத்திலே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், நண்பர்கள் சந்திப்பால் நன்மையுண்டு.



**மகரம்** — ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், தொட்ட காரியங்களில் வெற்றி பெற அம்பிகையை வழிபட வேண்டிய நாள், ஆழ்ந்த சிந்தனையுண்டு.



**ரிஷபம்** — குடும்பத்தில் நிலவி வந்த குழப்பங்கள் குறையும், நண்பர்களைச் சந்தித்து நலம் காணும் நாள், அரை குறையாக இருந்த பணிகளை இன்று செய்து முடிப்பீர்கள், பயணங்களால் பலனுண்டு



**சிம்மம்** — சிக்கனத்தைக் கடைப் பிடிக்கும் எண்ணம் உருவாகும், எதிரிகள் விலகுவார், பெண்களால் பெருமைகள் வந்து சேரலாம், தொழில் போட்டிகள் மாறும், கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம்.



**விருச்சிகம்** — சேமிப்பை உயர்த்தும் எண்ணம் உருவாகும், உறவினர்கள் உங்கள் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவார்கள், பொது வாழ்வில் புகழ் கூடும், வளர்ச்சி கூடும் நாள்,



**கும்பம்** — சாப்பிடக் கூட நேரமில்லாமல் சில வேலைகளைச் செய்வீர்கள், பிரபலமானவர்களின் சந்திப்பால் நன்மையுண்டு, மாற்றங்களால் ஏற்றமுண்டு, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்



**மிதுனம்** — உறவினர் விவகாரங்களில் தலையிடுவதைத் தவிர்ப்பது நல்லது, எந்தக் காரியத்திலும் நிதானத்துடன் நடந்து கொள்வது நல்லது, வரவைக் காட்டிலும் விரயம் மேலோங்கும் நாள்.



**கன்னி** — தொழிலில் அதிகாரிகளின் ஆதரவு பெருகும், நீண்டநாட்களாக தள்ளிப் போட்டு வந்த காரியமொன்றை இன்று செய்து முடிப்பீர்கள், மன நிறைவு கூடும் நாள்.



**தனுசு** — கொடுக்கல் வாங்கல்கள் ஒழுங்காகும், செய்தொழிலில் மேன்மையும் உயர்வும் கிட்டும், குடும்பத்தில் சுப நிகழ்வுகள் நடைபெறும் வாய்ப்புண்டு, வாக்கு மேன்மையுண்டு.



**மீனம்** — நீண்ட நாளைய விருப்பமொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் கைகூடும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

அன்பு குறைந்து விட்டால் குறைகள் பெரிதாகத் தெரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டவிரோத மணல் கடத்தல் சுட்டுப் பிடித்த பொலிஸார்

• இருவர் கைது • மன்னாரில் சம்பவம்

(மன்னார்)

**மன்னாரில் சட்டவிரோத மணல் கடத்தலில் ஈடுபட்ட டிப்பர் வாக னத்தைச் சுட்டுப்பிடித்த பொலிஸார் இருவரைக் கைது செய்துள்ளனர்.**



மன்னார் அடம்பன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பள்ளமடுப் பகுதியில் சட்ட விரோதமாக மணல் மண் ஏற்றிச் சென்ற டிப்பர் வாக னத்தைக் கடமையில் ஈடுபட்ட அடம்பன் பொலிஸார் இடை மறித்த போது பொலிஸாரின் சமிக்கை கட்டமைப்பை மீறி பொலிஸார் மீது வாகனத்தால் மோதிச் செல்ல முற்பட்ட போது குறித்த டிப்பர் வாகனத்தை நோக்கி பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட னர்.

குறித்த சம்பவம் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை மன்னார் அடம்பன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பள்ளமடுப் பகுதியில் இடம்பெற் றுள் ளது. குறித்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தை தொடர்ந்த போது குறித்த டிப்பர் வாகனம் நிறுத்தப்பட்டது.

இதன் போது குறித்த டிப்பர் வாகனத்தில் சட்டவிரோத மான முறையில் ஏற்றிச் செல லப்பட்ட மண் மற்றும் உபகர ணங்கள் காணப்பட்டதோடு அவை மீட்கப்பட்டதாக அடம்பன் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் குறித்த டிப்பர் வாகனத்தின் சாரதி மற்றும் உதவியாளர் அடம்பன் பொலி ஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலதிக விசாரணைகளை அடம்பன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(6-8-285)

# மாவை கலட்டி பிராங்கிளி பராசக்தி அம்மன் மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

மாவைகலட்டி பிராங்கிளி அருள்மிகு ஸ்ரீ பராசக்தி அம் மன் தேவஸ்தான மஹோற்சவ விஞ்ஞாபனம்(2025) எதிர் வரும் மே மாதம் 1 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பன் னிரண்டு நாட்கள் இடம்பெற வுள்ளது.

இவ் மஹோற்சவ தினங்க ளில் எதிர்வரும் 10 ஆம் திகதி சனிக்கிழமை சப்பறத் திரு விழாவும், 11 ஆம் திகதி ஞாயிற் றுக்கிழமை தேர்த்திருவிழா வும், 12 ஆம் திகதி திங்கட் கிழமை தீர்த்தோற்சவமும் இடம்பெற்று 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பூங்காவன உற்சவமும் இடம்பெறவுள்ளது என ஆலய ஆதீனகர்த்தா சி. கதிரவேலன் தெரிவித் துள்ளார். (3-8)

# உதைபந்தாட்ட சுற்றுப் போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பளை நாமகள் விளையாட்டுக் கழகம் இலங்கை உதைபந்தாட்ட சம் மேளனம் மற்றும் வலிகாமம் உதைபந்தாட்ட லீக் ஆகிய வற்றின் அனுமதியுடன் யாழ். மாவட்ட ரீதியில் நடத்தும் அணிக்கு 7 பேர் கொண்ட யாழின் நாயகன் உதைபந் தாட்டத் தொடர் குறித்த கழக மைதானத்தில் நடைபெற்று வருகிறது.

இதில் இன்று திங்கட் கிழமை பிற்பகல் 3.45 மணிக்கு விண்மீன் அணியை எதிர்த்து ஒலிம்பிக் அணியும் பிற்பகல் 4.45 மணிக்கு சென்லூட்ஸ் அணியை எதிர் த்து யங்லயன்ஸ் அணியும் மோதவுள்ளன. (3-8-90)

# வடமாகாண ஆளுநரை சந்தித்த ரவிகரன் எம்.பி



(நெளுக்குளம்)

வன்னிப் பகுதிகளில் காணப்படும் காணி விடயங் களிலுள்ள சிக்கல் நிலைமைகள் மற்றும் சில அபிவிருத்தி விட யங்கள் தொடர்பாக வன்னி மாவட்டப் பாராளுமன்ற உறுப் பினர் துரைராசா ரவிகரன், வட மாகாண ஆளுநர் நா. வேத நாயகனைச் சந்தித்து கலந் துரையாடினார்.

யாழில் அமைந்துள்ள வட மாகாண ஆளுநரின் அலு வலகத்தில் நேற்று குறித்த சந்திப்பு இடம்பெற்றது.

இந் நிலையில் தம்மால் எடுத்துரைக்கப்பட்ட விடயங் கள் தொடர்பில் கவனம் செலுத்துவதாக ஆளுநர் இதன் போது தெரிவித்ததாக பாரா ளுமன்ற உறுப்பினர் ரவிகரன் தெரிவித்துள்ளார். (6-8-299)

# கணித பாட செயற்பாட்டு முகாம்

(சாவகச்சேரி)

ஆரம்பக்கல்வி மாணவர் களுக்கான கணிதபாட செயற் பாட்டு முகாம் நிகழ்வு தென் மராட்சிக் கல்வி வலய ஆரம் பக்கல்வி அபிவிருத்திப் பிரிவின் ஏற்பாட்டில்அண்மையில்இடைக் குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய வித்தி யாலயத்தில் இடம்பெற்றது.

இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பி ரமணிய வித்தியாலய அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி நிகழ்வில் முதன்மை விருந்தினராக தென் மராட்சிக் கல்வி வலயத்தின் ஆங்கில பாட பிரதிக் கல்விப் பணிப்பாளர் ப.சுதர்சன் கலந்து சிறப்பித்திருந்தார். (6-8-30)

# தென்மராட்சி கல்வி வலயம் நடத்திய நாதநர்த்தன நிகழ்வு

(சாவகச்சேரி)

தென்மராட்சிக் கல்வி வலயம் நடத்தும் நாதநர்த் தன வர்ணம் நிகழ்வுகள் கடந்த 17 ஆம் திகதி வியாழக்கிழமை சாவகச் சேரி நகராட்சிமன்றப் பொன் விழா மண்டபத்தில் தென் மராட்சிக் கல்வி வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் மு.ஜெகதாசன் தலைமை யில் இடம்பெற்றது.

தென்மராட்சி அபி விருத்திக்கழகத்தின் அனு சரணையில் தென் மராட்சிக் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளின் மாணவ, மாணவிகளின் பங்குபற்று தலுடன் இடம் பெற்ற இந் நிகழ்விற்கு பிரதம அதிதியாக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற்கல்லூரி நடனத்துறை சிரேஸ்ட விரி வுரையாளர் ச.சுபாதினியும், சிறப்பு விருந்தினராக தென்ம ராட்சிக் கல்வி வலய நடன பாட முன்னாள் ஆசிரிய ஆலோசகர் வி.யசோதராவும் கலந்து சிறப்பித்திருந்தனர்.(6-8-30)



நல்லூர் சங்கிலியன் சனசமூக நிலையத்துக்கும் திருநெல் வேலி வாலை அம்மன் சனசமூக நிலையத்துக்கும் இடையே யான துடுப்பாட்டப் போட்டி புதுவருட தினமான கடந்த 14 ஆம் திகதி செங்குந்த இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது. இந்தப் போட்டியில் சங்கிலியன் சனசமூக நிலையம் வெள்ளிக் கிண்ணத்தை சுவீகரித்துக்கொண்டது.

# ஆண்டு நிறைவு விழா

(யாழ்ப்பாணம்)

பெண்கள் சுப நல நிலை யத்தின் முதலாம் ஆண்டு நிறைவு விழா நாளை மறு தினம் புதன்கிழமை காலை 10.30 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலை பெண்கள் சுக நல நிலையத் தில் இடம்பெறவுள்ளது.(3-8)



தென்மராட்சி, மீசாலை வடக்கு, வேம்பிராய் - கான்றைச்சாட்டி அலாக்கிரக பூதவரத விநாயகர் ஆலயத்தின் தேர்த்திருவிழா கடந்த 18 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பக்தி பூர்வமாக நடைபெற் றது. (படம்-சுபேசன்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நுவரெலியாவிற்கு செல்லும் சுற்றுலாப் பயணிகள் அசௌகரியம்

(நுவரெலியா)


சுற்றுலாத்தலமான நுவரெலியாவிற்கு தினமும் உள்நாட்டு மற்றும் வெளிநாடுகளில் இருந்தும் ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருகின்றனர்.

இதில் ஏப்ரல் மாதத்தில் முதலாம் திகதி முதல் முப்பதாம் திகதி வரை வசந்த கால கொண்டாட்டம் நடைபெறுவதால், அதிகமான சுற்றுலாப் பயணிகள் வந்து செல்கின்றனர்.

இயற்கை எழில் சூழ்ந்த நுவரெலியா தற்போது எங்கும் குப்பை குவியல்களும், பிளாஸ்ரிக் கழிவுகளும் நிறைந்து காணப்படுகின்றது.

எனவே, சுற்றுலாப்பயணிகள் அதிகம் வருகை தரும் இடங்களில் தேவைக்கேற்ப குப்பைத் தொட்டிகளை வைப்பது அவசியம் எனவும் அப்பகுதிகளுக்கு பொறுப்பான சுகாதார அதிகாரிகள் இதனைக் கவனத்திற்கொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அப்பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (6-8)

# கோழிகளை ஏற்றிச் சென்ற லொறி பாலத்துக்குள் விழுந்து விபத்து



(கொழும்பு)

ஹெட்டிபொல-தம்புள்ள குமாரஹல்ல பிரதான வீதியில் பாலத்தின் அருகில் கோழிகளை ஏற்றிச் சென்ற லொறி ஒன்று பாலத்துக்கு கீழே விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்து நேற்று அதிகாலை 3 மணிக்கு இடம்பெற்றுள்ளதாகக் ஹெட்டிபொல பொலிஸார் தெரிவித்தனர்.

சாரதியின் கவனக் குறைபாடு காரணமாக இந்த விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

லொறியில் பயணம் செய்த சாரதி மற்றும் சிலர் காயம் ஏற்பட்டு குருணாகல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக மேலும் தெரிவிக்கப்படுகின்றது. (6-8)

# தேர்தல் முறைப்பாடுகள் 211 ஆக உயர்வு

(கொழும்பு)

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுடன் தொடர்புடைய சட்ட மீறல்கள் மற்றும் வன்முறைகள் தொடர்பாக இது வரையில் 211 முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாகக் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அதன்படி, வன்முறை தொடர்பாக 45 முறைப்பாடுகளும், தேர்தல் சட்ட மீறல் தொடர்பாக 166 முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

குறித்த முறைப்பாடுகள் தொடர்பில் 21 வேட்பாளர்களும் 70 ஆதரவாளர்களும் கைது செய்யப்பட்டுள்ளதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (6-8)

# போர்ப் பயிற்சிகள் கைவிடப்படவில்லை

## பாதுகாப்பு அமைச்சு

(கொழும்பு)

பாகிஸ்தான் கடற்படையினருடனான போர்ப்பயிற்சி கைவிடப்பட்டுள்ளதாக வெளியாகும் செய்திகளில் எது வித உண்மையும் இல்லை என இலங்கை அரசு அறிவித்துள்ளது.

குறித்த விடயம் தொடர்பில் பாதுகாப்பு அமைச்சிடம் ஊடகம் வினவிய போது உண்மைக்குப் புறம்பான செய்தி என அமைச்சின் சிரேஸ்ட பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்திய அழுத்தம் காரணமாக இலங்கையில் நடைபெறவிருந்த பாகிஸ்தான் கடற்படையினருடனான போர்ப் பயிற்சியொன்று கைவிடப்பட்டுள்ளதாக நேற்று முன்தினம் இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தன.

எனினும் பாகிஸ்தானிய போர்க்கப்பல் இலங்கையின் திருகோணமலை துறைமுகத்துக்கு வருகை தந்து இருநாட்டு கடற்படையினரும் போர்ப் பயிற்சிகளை மேற்கொண்டபின் கடந்த மார்ச் 6ஆம் திகதி இங்கிருந்து புறப்பட்டுச் சென்றுவிட்டதாகப் பாதுகாப்பு அமைச்சு விளக்கமளித்துள்ளது.

எனவே போர்ப் பயிற்சிகள் கைவிடப்பட்டதாக வெளியாகியுள்ள தகவல்களில் எதுவித உண்மையும் இல்லை என்றும் பாதுகாப்பு அமைச்சு தெளிவுபடுத்தியுள்ளது. (6-8)


# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு :1996- இந்து<br>நட்சத் திரம்: அச்சுவினி<br>கிபா-16<br>உயரம் : 5'8"<br>தகைமை/தொழில்:Bsc,Nurse (Australia)<br>எதிர்பார்ப்பு - பட்டதாரி<br>தொ.இ: B/15340 | பிறப்பு-1995-இந்து<br>நட்சத்திரம் : திருவோணம் 8 இல் செவ்<br>உயரம் : 5'2"<br>தகைமை/தொழில்: BSMS,Medical Officer<br>எதிர்பார்ப்பு:BSc பட்டதாரி<br>தொ.இ: G/15391 |
| பிறப்பு:1985-இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>கி.பா: -53<br>உயரம் :5'6"<br>தகைமை/தொழில்- A/L,Assistant Manager(pvt)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15342 | பிறப்பு-1991-இந்து<br>நட்சத்திரம்: சுவாதி 9 இல் சூரி செவ்<br>கி.பா: 14 1/2<br>உயரம் : 5'2"<br>தகைமை/தொழில்: BSMS,ஆயுள் வேதவைத்தியர்<br>எதிர்பார்ப்பு: அரச தொழில்<br>தொ.இ: G/15392 |
| பிறப்பு: 1991-RC<br>நட்சத்திரம் -மகம்<br>உயரம் : 5'4"<br>தகைமை/தொழில்: BSc,Senior Engineer(Singapore)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/15343 | பிறப்பு -1996- இந்து<br>நட்சத்திரம்:ரேவதி 8 இல் செவ்<br>உயரம் :5'2"<br>தகைமை/தொழில்: BSc,SeniorHR(PVT)<br>எதிர்பார்ப்பு:Suitable Professional<br>தொ.இ: G/15365 |

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


# புனித தந்ததாது புகைப்படம் தொடர்பில் சி.ஐ.டி விசாரணை

(கொழும்பு)

கண்டியில் உள்ள ஸ்ரீ தலதா மாளிகையில் நடைபெற்று வரும் ஸ்ரீ தலதா வழிபாட்டின் போது புனித தந்ததாதுவைப் புகைப்படம் எடுத்து சமூக ஊடகங்களில் வெளியிட்டதாக கூறப்படும் சம்பவம் தொடர்பில் சி.ஐ.டி விசாரணையைத் தொடங்கியுள்ளது.

இந்தப் படம் 2025 ஏப்ரல் 18 ஆம் திகதிக்கு பின்னர் விகாரைக்குச் சென்ற ஒரு பக்தர் எடுத்ததாகக் கூறி சமூக ஊடகங்களில் பகிரப்பட்டு வருவதாக பொலிஸ் தலைமையகம் கூறியுள்ளது.

எனினும் மத அனுஷ்டானத்தில் கலந்து கொள்ளும் பக்தர்கள் மொபைல் போன்களைப் பயன்படுத்துவதோ அல்லது நினைவுச்சின்னத்தை புகைப்படம் எடுப்பதோ கட்டாயம் தடை செய்யப்பட்டுள்ளது.

தற்போது பதில் பொலிஸ்மா அதிபரின் அறிவுறுத்தலுக்கு அமைவாகக் குறித்த படம் தலதா வழிபாட்டின் போது எடுக்கப்பட்டதா, அது ஒரு பார்வையாளரால் எடுக்கப்பட்டதா அல்லது டிஜிற்றல் முறையில் மாற்றப்பட்டுள்ளதா என்பதைக் கண்டறிய சி.ஐ.டி தற்போது விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் கூறப்படுகிறது. (6-8)


# புதிய உதயம்

யாழ்ப்பாணத்தில்

கோழிகள், முட்டைகள் மலிவு விலையில் வாடிக்கையாளர்கள் நலன் கருதி எமது நிறுவனம் தினந்தோறும் திறக்கப்படுகின்றது.

விலை விபரம்:

புறோயிலர் இறைச்சி - 950/=
கல்பேட் இறைச்சி - 950/=
பேரன்ஸ் இறைச்சி - 1100/=
ஊர் சேவல் - 1300/=
முட்டை (1) - 25/=

(3977)

இவை அனைத்தும் எம்மிடம் எப்போதும் மலிவு விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள முடியும் என்பதை அறியத் தருகின்றோம்.

நியூ சிற்றி கோழிக்கடை
பொம்மைவெளி, காரைநகர் வீதி, யாழ்ப்பாணம்.
077 468 3354


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## புதிய மனிதா பூமிக்கு வா

# மனிதர்களுடன் ரோபோக்கள் பங்குபற்றிய மரதனோட்டம்

## சீனாவில் சிறப்பாக நடைபெற்றது




(பீஜிங்)

மனிதர்கள், ரோபோக்கள் பங்கேற்ற உலகின் முதல் மரதன் ஓட்டப் போட்டியை சீனா நடத்தியுள்ளது.

வேகமான உலகில் செயற்கை நுண்ணறிவு (AI) மற்றும் ரோபோக்கள் தயாரிப்பில் பல அசாத்திய தயாரிப்புக்கள் உருவாகி வரும் நிலையில், நேற்று முன்தினம் சனிக்கிழமை சீனாவில் நடந்த மரதன் ஓட்டப் போட்டியில் 21 மனித ரோபோக்கள் ஆயிரக் கணக்கான மனிதர்களு டன் இணைந்து பங்கேற் றன.

DroidVP மற்றும் Noetix Robotics போன்ற சீன உற்பத்தியாளர்களின் ரோபோக்கள் அனைத்து வடிவங்களிலும் அளவுகளி லும் போட்டியில் பங்கேற் றன. சில 120cm (3 அடி 9 அங்குலம்) ஐ விடக் குறைவானவை, மற்றவை 1.8 மீ (5 அடி 9 அங்குலம்) உயரம் கொண்டவை.

மனித தடகள வீரர்க ளும் கலந்துகொண்ட இந் தப் போட்டியில், தங்களுக் கென்று தனியாக அமைக் கப்பட்டிருந்த தடத்தில் ஓடி வந்த பல்வேறு வடிவிலான ரோபோக்கள் மற்றும் மனி தர்களை பார்வையாளர்கள் உற்சாகமாக வரவேற்ற னர்.

இந்த ரோபோக்களுடன் மனித பயிற்சியாளர்களும் இருந்தனர். சில ரோபோக் கள் மரதன் ஓட்டத்தின் போது விழுந்ததுடன் சில சேதமடைந்தன.

சில ரோபோக்கள் காலணிகளையும் அணிந் திருந்தன. ஒன்று குத்துச்சண்டை கையுறை களை அணிந்திருந்தது. மற்றொன்று சீன மொழி யில் "வெற்றி பெற வேண் டும்" என்ற வார்த்தைகள் கொண்ட சிவப்பு தலைக் கவசத்தை அணிந்திருந் தது. அனைத்திலும் வெற்றி பெற்ற ரோபோ பெய்ஜிங் இன்னோவேஷன் சென்டர் ஆ.ப் ஹ்யூமன் ரோபோட் டிக்ஸ் நிறுவனத்தைச் சேர் ந்த டியாங்காங் அல்ட்ரா, 2 மணி நேரம் 40 நிமிடங் கள் ஓடி முதலிடம் பெற் றது.

போட்டியின் முடிவில் வேகமான ஓட்டத்துக்கு மட் டுமின்றி, அதிக பட்டரிகள் மாற்றாமல் நீடித்து ஓடி யது, சிறந்த வடிவமைப்பு, சிறந்த புத்தாக்கம் போன் றவற்றின் அடிப்படையி லும் பரிசுகள் வழங்கப்பட் டன. (க-6-8)



## ஜம்மு காஷ்மீரில் நிலச்சரிவு

### ❖ 3 பேர் பலி
### ❖ கட்டடங்கள் சேதம்



(காஷ்மீர்)

ஜம்மு காஷ்மீரில் பல் வேறு இடங்களில் கன மழை பெய்து வரும் நிலையில் மழை வெள்ளம் மற்றும் நிலச்சரிவு காரணமாக தேசிய நெடுஞ்சாலையில் போக்குவரத்து பாதிக்கப்பட் டுள்ளது.

ஏராளமான தொடர் மாடிக் கட்டடங்கள், வாகனங்கள் மழையால் சேதமடைந்தன. நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட பகுதியில் வசித்த மக்கள் பாதுகாப்பான இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ள னர்.

காஷ்மீரில் ராம்பன் மாவ ட்டத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் சிக்கி 3 பேர் உயிரிழந்தனர். இது குறித்து ஜம்மு காஷ்மீர் முதல்வர் உமர் அப்துல்லா வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது, ராம்பனில் ஏற்பட்ட நிலச்சரிவு மற்றும் திடீர் வெள்ளத்தால் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. இந்த கடின நேரத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு ஆதரவாக இருப்போம்.

தேவைப்படும் இடங்களில் உடனடி மீட்புப் பணிகள் மேற் கொள்ள அதிகாரிகளுடன் நாங்கள் தொடர்பில் இருக் கிறோம். பாதிக்கப்பட்ட பகுதி களில் நிலைமையை சரி செய்ய நடவடிக்கை எடுத்து வருகிறோம். நிலச்சரிவால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு மக்கள் செல்வதை தவிர்க்க வேண்டும் இவ்வாறு அவர் கூறியுள்ளார். (6-8)

## 'எனது மரணம் உலகத்திற்கே கேட்கும்'

# இஸ்ரேல் தாக்குதலில் காசா பெண் பத்திரிகையாளர் பலி

(ஜெருசலேம்)

இஸ்ரேல் - ஹமாஸ் போரின் விளைவுகளை புகைப்படங்களின் மூலம் உலகிற்கு காட்டிய காசா வைச் சேர்ந்த புகைப்பட பத்திரிகையாளர் ஃபாத்திமா ஹசௌனா (25) இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்கு தலில் உயிரிழந்த சம்பவம் சோகத்தை ஏற்படுத்தி உள் ளது. ஃபாத்திமாவுக்கு இன் னும் சில நாட்களில் திரு மணம் நடைபெற இருந்த நிலையில், இந்த சோக மான சம்பவம் நிகழ்ந்துள் ளது.

கடந்த புதன்கிழமை வடக்கு காசாவில் நடந்த இஸ்ரேல் தாக்குதலில் ஃபாத்திமா மற்றும் அவ ரின் குடும்பத்தினர் 10 பேரும் உயிரிழந்துள்ளனர். இதில் அவரின் கர்ப்பமான சகோதரியும் அடங்குவார்.

'நான் ஒரு செய்தியாக இருக்க விரும்பவில்லை. எனது மரணம் உலகத் திற்கே கேட்கும்படியும், காலத்திற்கும் நிலைத்தி ருக்கும் படியும் இருக்க விரும்புகிறேன்' என ஃபாத்திமா ஒருமுறை இணையத்தில் பதிவிட் டதை பலரும் நினைவுகூர் ந்து வருகின்றனர். (6-8)



# அரிசிய

# பக்கவிளை

## ஆய்வில்

**(வோஷிங்டன்)**

**ஆசியநாடுகளின் ம**

**பேருக்கு 2050 ஆம்**

**ஏற்படும் அபாயநி**

**கணிக்கப்பட்டுள்ளத**

**பல்கலைக்கழக ஆய்வ**

காலநிலை மாற்றம் அரிசியில் அதிக அளவு ஆர்சனிக் ஏற்பட வழிவகுக்கும், இது 2050 ஆம் ஆண்டுக்குள் ஆசிய நாடுகளில் உள்ள மக்களுக்கு வாழ்நாள் புற்றுநோய் மற்றும் உடல்நல அபாயங்களை அதிகரிக்கும் என்று தி லான்செட் பிளானட்டரி ஹெல்த் இதழில் வெளியிடப்பட்ட ஒரு புதிய ஆய்வு தெரிவிக்கிறது.

அமெரிக்காவின் கொலம்பியா பல்கலைக்கழக ஆராய்ச்சியாளர் கள், 2 டிகிரி செல்சியஸ்'க்கு மேல்

## காசா பே

# கைகளை இழந்

## புகைப்படத்திற்கு ச



(ஜெருசலேம்)

காசா யுத்தத்தில் சிக்கி இரண்டு கைகளையும் இழந்த பாலஸ்தீன சிறுவனின் புகைப்படம் 2025 ஆம் ஆண்டின் சிறந்த உலக பத்திரிகை புகைப்படமாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

பாலஸ்தீன புகைப்படக் கலைஞர் சமர் அபு எலுவ் நியு யோர்க் டைம்சிற்காக எடுத்த புகைப்படத்திற்கே இந்த விருது கிடைத்துள்ளது.

இந்த புகைப்படம் 2024 மார்ச் மாதம் இஸ்ரேல் மேற்கொண்ட தாக்குதல் காரணமாக தனது இரண்டு கைகளையும் இழந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# வெளிநாடு

# ால் உருவாகவுள்ள புற்றுநோய்

# ளவுகள் அதிகம் ஆசிய நாடுகளுக்கே!

## அதிர்ச்சித் தகவல்

**மக்கள் தொகையில் கோடிக்கணக்கான ம் ஆண்டில் புற்றுநோய் பாதிப்புகள் நிலை உள்ளது என ஆய்வில் தாக அமெரிக்காவின் கொலம்பியா வாளர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.**



வெப்பநிலை அதிகரிப்பதும், காபனீரொட்சைட்டின் அளவு அதிகரிப்பதும் மண் வேதியியலில் மாற்றங்களை ஏற்படுத்தி, ஆர்சனிக்கிற்கு சாதகமாக மாறக்கூடும் என்று கண்டறிந்துள்ளனர்.

இந்த ஆர்சனிக், அரிசி தானியத்தில் எளிதில் உறிஞ்சப்படுகிறது. நெல் சாகுபடியின் போது மாசுபட்ட மண் மற்றும் பாசன நீர் ஆகியவை அரிசியில் கனிம ஆர்சனிக் அளவை அதிகரிப்பதாக அறியப்படுகிறது. சமையலுக்குப் பயன்படுத்தப்படும் தண்ணீரிலிருந்து கூடுதல் ஆர்சனிக்கையும் அரிசி உறிஞ்சிவிடும்.

ஆர்சனிக்கின் அதிகரித்த வெளிப்பாடு நுரையீரல், சிறுநீர்ப்பை மற்றும் தோல் புற்றுநோய்கள் உள்ளிட்டவற்றின் அபாயத்தை அதிகரிப்பதாக அறியப்படுகிறது.

இலங்கை, இந்தியா, பங்களாதேஷ், நேபாளம், தாய்லாந்து மற்றும் வியட்நாம் உள்ளிட்ட தெற்கு மற்றும் தென்கிழக்கு ஆசிய நாடுகளில் அரிசி முக்கிய உணவாக உள்ளதால், இங்கு அரிசி நுகர்வு ஒரு பெரிய சுகாதார அச்சுறுத்தலாக இருப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

இந்த ஆய்வில், ஆராய்ச்சியாளர்கள் வயலில் 10 ஆண்டுகளில் 28 அரிசி வகைகளில் அதிகரித்து வரும் வெப்பநிலை மற்றும் காபனீரொட்சைட்டின் விளைவுகளை அளந்து அதன் மாதிரிகளைப் பயன்படுத்தி, பங்களாதேஷ், சீனா, இந்தியா, இந்தோனேசியா, மியான்மார், பிலிப்பைன்ஸ் மற்றும் வியட்நாம் ஆகிய ஏழு ஆசிய நாடுகளுக்கான கனிம ஆர்சனிக் அளவுகள் மற்றும் சுகாதார அபாயங்கள் மதிப்பிடப்பட்டன.

இந்த ஆய்வின் முடிவில், அரிசியில் ஆர்சனிக் செறிவுகளை அதிகரிக்க வெப்பநிலை மற்றும் காபனீரொட்சைட்டு ஒருங்கிணைந்த முறையில் செயற்படுவதையும், அரிசி நுகர்வோருக்கு உணவு ஆர்சனிக் வெளிப்பாடுகளை அதிகரிப்பதையும், 2050 ஆம் ஆண்டில் ஆசிய நாடுகளின் மக்கள்தொகையில் கோடிக்கணக்கானோருக்குப் புற்றுநோய் பாதிப்புகள் ஏற்பட வழிவகுக்கும் என்பதையும் கண்டறிந்ததாக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

ஆய்வு செய்யப்பட்ட ஏழு நாடுகளில், 2050 ஆம் ஆண்டில் அரிசியில் உள்ள ஆர்சனிக் காரணமாக அதிகபட்சமாக சீனாவில் 1.34 கோடி புற்றுநோய் பாதிப்புகள் ஏற்படும் என்று கணிக்கப்பட்டுள்ளது. (6-8)

## போரில்
## ந்த சிறுவனின்
## சர்வதேச விருது




ஒன்பது வயது சிறுவனின் துயரத்தை வெளிப்படுத்துகின்றது. 2023 இல் காசாவிலிருந்து வெளியேறிய பெண் புகைப்படக்கலைஞரான சமர் அபு எலுவ் டோஹாவில் இந்த சிறுவன் வசிக்கும் தொடர்மாடியிலேயே தற்போது வசித்து வருகின்றார்.

இஸ்ரேலின் தாக்குதலால் காயங்களிற்குள்ளான பல பாலஸ்தீனியர்களின் புகைப்படங்களை சமர் அபு எலுவ் பதிவு செய்துள்ளார்.

இது அமைதியான ஆனால் உரத்த குரலில் பேசும் புகைப்படம் என உலக பத்திரிகை புகைப்பட அமைப்பின் நிறைவேற்று பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்த புகைப்படம் ஒரு சிறுவனின் கதையை சொல்லும் அதே வேளை பலதலைமுறைகளின் மீது தாக்கம் செலுத்தப்போகும் பரந்துபட்ட யுத்தம் குறித்தும் பேசுகின்றது என அவர் குறிப்பிட்டுள்ளார். (6-8)

## சுற்றுலாப் பேருந்து கவிழ்ந்து விபத்து; 25 பேர் படுகாயம்



(காத்மண்டு)

நேபாளத்தில் சுற்றுலா பேருந்து விபத்துக்குள்ளானதில் 25 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

உத்தரப் பிரதேசத்தின் லக்னௌ மாவட்டத்தைச் சேர்ந்த பேருந்தின் மூலம் நேபாளத்தின் பிரபல சுற்றுலாத் தளமான போகராவிற்கு 25 இற்கும் மேற்பட்டோர் சென்று கொண்டிருந்தனர்.

நேபாளத்தின் தாங் மாவட்டத்தின் சிஸாபானி பகுதியில் பேருந்து சென்று கொண்டிருந்த போது பிரேக்குகள் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து அங்கிருந்த சுவரில் மோதி கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் படுகாயமடைந்த 25 இந்தியர்களை நேபாள பொலிஸார் மீட்டு அருகிலுள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர்.

மேலும், அதிஷ்டவசமாக இந்த விபத்தில் பயணிகளின் உயிருக்கு பெரியளவிலான அச்சுறுத்தல்கள் எதுவுமில்லை எனவும் விபத்துக்குள்ளான பேருந்தின் ஓட்டுநரைக் கைது செய்த அந்நாட்டு பொலிஸார் அவரிடம் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஓட்டுநரைத் தவிர காயமடைந்த அனைத்து பயணிகளும் முதலுதவி பெற்ற பின்னர் இந்தியாவுக்கு திரும்பியதாகக் கூறப்பட்டுள்ளது. (6-8)

## மயக்கம் வரவைக்கும் உணவுப் பொருட்களின் விலை நடந்தது என்ன?

(இஸ்தான்புல்)

எப்போதும் ஒரு பொருளின் விலை கடைகளுக்கு மத்தியில் வேறுபடும். அதே பொருளின் விலை பேருந்து மற்றும் ரயில் நிலையங்கள் எனில் சொல்லவே வேண்டாம்.

இந்நிலையில் விமான நிலையத்தில் இன்னும் அதிகமாகவே இருக்கும். அந்த வகையில், வாழைப்பழம் ஒன்றின் விலை 565 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுவது தான் பேசுபொருளாகியுள்ளது.

துருக்கி நாட்டில் உள்ள மிகப்பெரிய விமான நிலையங்களில் ஒன்று இஸ்தான்புல் சர்வதேச விமான நிலையம். இது, ஐரோப்பா மற்றும் ஆசிய கண்டங்களுக்கு நடுவே அமைந்துள்ளது.

இங்கு, நாளொன்றுக்கு 2.20 லட்சம் பயணிகள் வருவதாகவும் 1,500 இற்கும் மேற்பட்ட விமானங்கள் இயக்கப்படுவதாகவும் கூறப்படுகிறது.

இதனாலேயே இந்த விமான நிலையம் சர்வதேச அளவில் முக்கியத்துவம் பெறுகிறது.

இந்நிலையில் இங்கு ஒரு வாழைப்பழம் ரூ.565 இற்கு (5 யூரோ) விற்பனை செய்யப்படுவதாக பயணிகள் அதிர்ச்சி தகவலை பகிர்ந்துள்ளனர். மேலும், இங்கு லாசக்னா (பாஸ்தா போன்ற உணவு) 90 கிராமின் விலை ரூ. 2,376 இற்கும் (21 யூரோ) விற்கப்படுகிறது.

தவிர, மெக்டொனால்ட்ஸ் மற்றும் பர்கர் கிங் போன்ற மலிவு விலையில் விற்கப்படும் துரித உணவுகள் கூட அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவதாகப் பயணிகள் தெரிவிக்கின்றனர். (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேயிலை ஏற்றிச் சென்ற டிப்பர் விபத்து; மூவர் காயம்



(கொழும்பு)

தேயிலை ஏற்றிச் சென்ற டிப்பர் ரக வாகனமொன்று வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் மூன்று பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் பிற்பகல் 3.30 மணியளவில் ஹற்றன்- பொகவந்தலாவ பிரதான வீதியிலுள்ள நோர்வூட் சென் ஜோண் டிலரி பகுதியில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

வாகனத்தில் ஏற்பட்ட திடீர் இயந்திரக் கோளாறு காரணமாகவே, இந்த விபத்து ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. விபத்தில் காயமடைந்த மூவரும் டிக்கோயா ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் இவ் விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (6-8)



## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | நெல்லியடி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 500 | 400 | 450 | 400 | 500 |
| உருளைக்கிழங்கு | 180 | 200 | 180 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 350 | 450 | 600 | 400 | 600 |
| தக்காளி | 550 | 500 | 700 | 400 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 280 | 250 | 200 |
| கோவா | 350 | 300 | 350 | 350 | 400 |
| கரட் | 800 | 500 | 600 | 500 | 600 |
| பூசணி | 250 | 230 | 300 | 240 | 240 |
| புடோல் | 200 | 250 | 250 | 200 | 400 |
| வாழைக்காய் | 100 | 100 | 100 | 70 | 150 |
| சின்ன வெங்காயம் | 200 | 100-300 | 300 | 150-300 | 300 |
| பெரிய வெங்காயம் | 140 | 160 | 160 | 150 | 160 |
| பாகற்காய் | 600 | 500 | 500 | 500 | 500 |
| வெண்டக்காய் | 300 | 350 | 250 | 300 | 400 |
| கருணைக் கிழங்கு | 200 | 300 | 300 | 200 | 300 |
| பயற்றங்காய் | 200 | 250 | 200 | 200 | 300 |
| லீக்ஸ் | 350 | 300 | 350 | 250 | 300 |
| பீற்றூட் | 350 | 500 | 450 | 350 | 500 |
| கறிமிளகாய் | 600 | 550 | 600 | 500 | 600 |
| முருங்கைக்காய் | 2300 | 3000 | 2000 | 3000 | 2000 |
| போஞ்சி | 400 | 500 | 800 | 450 | 600 |
| கத்தரிதம்புள்ள | 450 | 350 | 350 | -- | 450 |
| கீரை - 1 பிடி | 120 | 80-120 | 150 | 80 | 100 |
| தேசிக்காய் | 200 | 250 | 200 | 150 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 200 | 280 | 150 | 150-250 | 200-240 |
| இராசவள்ளி | 600 | 700 | 600 | 550 | 600 |
| வெங்காயப்பூ | 250 | -- | 400 | -- | 600 |
| முள்ளங்கி | 150 | 150 | 200 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 120 | 80 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 60 | 70 | 100 | 80 | 80 |
| ஈரப்பலா | 150 | -- | 100 | 100 | 200 |

## இன்று ஒரு தகவல் 361

தென்கச்சி கோ.சுவாமிநாதன்



# பயமும் பாதுகாப்பும்

ஒருவர் கூட நாம் சண்டை போடுகின்றோம் அதில் நாம் வெற்றி அடைவதாக வைத்துக்கொள்வோம். நம் மனதுக்கு சந்தோசமாகத்தான் இருக்கும். இருந்தாலும் உள் மனதில் ஒரு பயமும் உண்டாகலாம்.

தோற்றுபோனவர் சும்மா இருப்பாரா? அவர் மறுபடியும் எப்பொழுது சந்தர்ப்பம் வரும் என்று எதிர்பார்த்துகொண்டுதான் இருப்பார். அதனால் வெற்றியின் ஒரு பக்கம் சந்தோசமாக இருந்தாலும் இன்னொரு பக்கம் பயமாகதான் இருக்கும்.

ஒரு மன்னன் இருந்தான் அவன் நிறையப்பேரோடு சண்டைபோட்டான். ஜெயிச்சான் பல நாடுகளை வென்றான் அதனாலேயே அவன் மனதுக்குள் ஒரு பயம் உண்டாகிவிட்டது. பகை மன்னர்கள் அனைவரும் படையெடுத்துவந்துவிட்டால் என்ன செய்வது என்ற பயம்.

எல்லோரும் வந்து இப்பொழுது இருக்கின்ற இந்த மாளிகையை கைப்பற்றிவிட்டால் என்ன செய்வது என்று யோசித்தான். நடுங்க ஆரம்பித்தான். ஏன் ஒரு மாதிரியாக இருக்கின்றீர்கள் என்று கேட்டார் அமைச்சர். இவன் விபரத்தைச் சொன்னான். இருவரும் சேர்ந்து ஒரு திட்டம் போட்டார்கள்

அதன் பிரகாரம் ஒரு மாளிகையை புதியதாக கட்டினார்கள்.அதற்கு ஜன்னல் இல்லை உள்ளே போக வெளியே வர ஒரு கதவு மட்டும்தான் உண்டு. அதைத் தவிர அந்த மாளிகைக்கு வேறு எந்த வழியும் கிடையாது. ஒரு சின்னத் துவாரம் தெரிந்தால் கூட அதையும் சுத்தமாக அடைத்து விட்டார்கள்.

ஒரே ஒரு கதவு இருந்தது. அதைப் பாதுகாப்பதற்காக ஏராளமான வீரர்களை நிறுத்திவிட்டான். இவ்வளவும் செய்து முடித்த பின் தான் அந்த மன்னனுக்கு திருப்தியாக இருந்தது.

ஒரு நாள் அந்த ராஜாவும் அமைச்சரும் அந்த ஒரு கதவு வழியாக கீழே வந்தார்கள்.என்ன அமைச்சரே நம் ஏற்பாடு எப்படி என்று சிரித்துக் கொண்டே கேட்டார் ராஜா. அபாரம் என்றார் அமைச்சர் அவர் வேறு என்ன சொல்வார்.இவர்கள் இவ்வாறு பேசிக்கொண்டதை அங்கே வீதி ஓரமாக உட்கார்ந்திருந்த ஒரு பெரியவர் கேட்டார். சிரித்து விட்டார் .

அவர் சிரித்ததைப் பார்த்ததும் அரசனுக்கு கோபம் வந்துவிட்டது. ஏன் சிரிக்கின்றீர்கள் என்று கேட்டார். அதற்கு அந்தப் பெரியவர் மிகவும் புத்திசாலித்தனமாகத்தான் இந்த மாளிகையைக் கட்டியிருக்கின்றீர்கள் மிகவும் பாதுகாப்பாகத்தான் உள்ளது இருந்தாலும் ஒரு குறை தெரிகின்றது என்றார் .

என்னவென்று கேட்டார் அரசன் . அதுக்கு அந்த பெரியவர் வேறு வழியே வைக்காமல் கட்டிய நீங்கள் எதற்காக ஒருவழியை மட்டும் வைத்தீர்கள். அந்த வழியால் எதிரிகள் நுழைந்தால் என்ன செய்வீர்கள் என்றார். அதற்கு என்ன செய்வது என்றார் அரசன். அதையும் ஒரு கருங்கல் சுவர் எழுப்பி அடைத்துவிடுங்கள் அதுதான் நல்லது அதன் பின் எதிரிகள் பயம் சிறிது கூட இல்லாமல் நீங்கள் உள்ளே அமர்ந்து இருக்கலாம் அதுதான் மிகக் கவனம் என்றார் .

மன்னன் யோசித்தான். ஒரு யோசனை தோன்றியது .அது சரி நீங்கள் சொல்வது போல் அந்த ஒரு வழியையும் அடைத்துவிட்டால் இந்த மாளிகை ஒரு கல்லறை போல் ஆகிவிடுமே என்றார்.

இப்பொழுது மட்டும் எவ்வாறு உள்ளது கல்லறை போலேதானே இருக்கின்றது என்றார். எதிரி வந்து உங்களை சாகடிக்காமல் விட்டாலும் நீங்கள் ஒருநாள் சாகத்தானே போகின்றீர்கள் என்றார்.

அதன் பின் சிறுவிளக்கம் கொடுத்தார். உங்கள் மாளிகையில் எவ்வளவு ஜன்னல்களும் கதவுகளும் இருக்கின்றதோ அந்த அளவுக்கு வெளி உலகத்தோடு உங்களுக்கு தொடர்பு உள்ளது. அந்த அளவுக்கு உங்கள் வாழ்க்கையில் ஓர் இயக்கம் இருக்கின்றது. கதவுகளை மூட மூட வாழ்க்கையும் அடைப்பட்டு போகின்றது.

நான் கூட ஒருகாலத்தில் மாளிகையில்தான் இருந்தேன் அதனுடைய சுவர்களை எவ்வளவுதான் தள்ளிப்போட்டாலும் என் வாழ்க்கைக்கு அவைகள் எல்லைக் கோடுகளாக இருப்பதை உணர்ந்தேன். வாழ்க்கைக்கு எல்லையே இருக்கக்கூடாது என்று நினைத்தேன் இப்படி வந்துவிட்டேன்.


இப்பொழுது என் வாழ்க்கைக்கு வானம்தான் கூரை இந்த நிலம்தான் என் மாளிகை. இப்பொழுதுதான் வாழ்க்கையை என்னால் முழுமையாக உணரமுடிகின்றது என்றார் . அரசன் வாழ்க்கைத் தத்துவத்தைப் புரிந்து கொண்டார். தன்னுடைய மாளிகைக்கு நிறைய ஜன்னல்களையும் கதவுகளையும் வைக்க உத்தரவு போட்டார் அரசன்.

ஒரு சுடுகாட்டிலே ஒரு கல்லறைக்கு மேலே கால் மேல் கால் போட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தான் ஒருவன். அந்த வழியே சென்ற இன்னொருவன் அவனைப் பார்த்து கேட்டார். ஏன் இப்படி பேய் பிசாசு நடமாடும் இந்த மாயானத்துக்கு வந்து கல்லறைக்கு மேலே உட்கார்ந்து இருக்கின்றீர் என்றார்.

எவ்வளவு காலம்தான் உள்ளேயே இருப்பது ஒரே புழுக்கமாக இருந்தது அதுதான் காற்று வாங்க வந்தேன் என்றார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிரதான ஏற்றுமதி பயிர்களின் உற்பத்தியில் வீழ்ச்சி-மத்தியவங்கி



(கொழும்பு)

நாட்டின் பிரதான ஏற்றுமதி பயிர்களான தேயிலை, தென்னை மற்றும் இறப்பர் ஆகியவற்றின் உற்பத்தி இந்த ஆண்டின் முதல் இரண்டு மாதங்களில் வீழ்ச்சியடைந்துள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

வறட்சியான காலநிலை காரணமாகக் கடந்த பெப்ரவரி மாதத்தில் தேயிலை உற்பத்தியானது 15.6 மில்லியன் கிலோகிராமாக வீழ்ச்சியடைந்த தாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன், கடந்த வருடம் பெப்ரவரி மாதத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடம் பெப்ரவரி மாதத்தில் இறப்பர் உற்பத்தி 5.3 மில்லியன் கிலோகிராமாக வீழ்ச்சியடைந்துள்ளது.

அதேநேரம் இந்த வருடம் பெப்ரவரி மாதத்தில் 178.1 மில்லியன் தேங்காய்கள் உற்பத்தி செய்யப்பட்டிருந்ததாகவும் இது கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் கணிசமான அளவு வீழ்ச்சியாகும் எனவும் இலங்கை மத்திய வங்கி குறிப்பிட்டுள்ளது. (6-8)

## பிரதமர் ஹரிணி அமரசூரிய வவுனியாவிற்கு விஜயம்



(குருமன்காடு)

வவுனியாவிற்கு நேற்று விஜயம் செய்த பிரதமர் ஹரிணி அமரசூரிய பல பொதுக் கூட்டங்களில் பங்கேற்றார்.

எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்காக தேசிய மக்கள் சக்தியின் கீழ் வவுனியா மாவட்டத்தில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு போட்டியிடும் வேட்பாளர்களின் வெற்றியை உறுதி செய்யும் வகையில் பொதுக் கூட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

அந்தவகையில், வவுனியா தெற்கு சிங்களப் பிரதேச சபை வேட்பாளர்களுக்கு ஆதரவு வேண்டி வவுனியா, ஈரப் பெரியகுளம் பகுதியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பிரதமர் கலந்து கொண்டார்.

இப் பொதுக் கூட்டத்தில் பிரதி அமைச்சர் உபாலி சமரசிங்க, பாராளுமன்ற உறுப்பினர்களான ம.ஜெகதீஸ்வரன், செ.திலகநாதன், வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபை வேட்பாளர்கள், பொது மக்கள், ஆதரவாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (6-8)

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## இயற்கை குளிர்பானம் பதநீர்




டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

பனையை மறந்ததால் இன்று பல துன்பங்களுக்கு ஆளாகி வருகிறோம். பனை மரம் மிக உயர்வாக இருப்பதால் மின்னலை உள்வாங்கக் கூடியது. இதை ஒரு கற்பகத்தரு மரம் எனவும் அழைப்பர்.

இவ்வாறு உள்வாங்கும் மின்னலை வேருக்குக் கடத்தி பூமியில் உள்ள சோடியம், கல்சியம், பொட்டாசியம் போன்ற கனிமங்களை அயனியாக்கி மிகப் பயன்தரு மரமாகிறது. எனவே இவ் மரத்திலிருந்து பெறும் பதநீரும் மிகுந்த சத்துக்கள் நிறைந்த குளிர்ச்சியான இயற்கைப் பானமாகிறது. இப் பருவகாலத்திற்கு உகந்த பானமாகின்றது.

கல்சியச் சத்தை அள்ளிக் கொடுக்கக்கூடிய பானமாகும். உடலிற்கு குளிர்ச்சியை தரக் கூடியது பதநீர். தொடர்ந்து இதைக் குடித்து வந்தால் மலச்சிக்கல் பிரச்சினை தீரும். இது கழிவு அகற்றியாகவும், வியர்வை நீக்கியாகவும் செயற்படுகிறது.

உடல் வீக்கம், வயிறு தொடர்பான பிரச்சினைகளுக்குச் சிறந்தது. பெண்களுக்கு ஏற்படும் வெள்ளை படுதல் நோயையும் நீக்கக் கூடியது. எலும்புத் தேய்மானம் மற்றும் எலும்பு தொடர்பான பிரச்சினைகள் வராமல் பாதுகாக்கும் ஆற்றல் பதநீருக்கு உண்டு. பதநீரை 48 நாட்கள் தொடர்ந்து குடித்து வந்தால் மேக நோய்கள் குணமாகும். சுண்ணாம்பு சேர்க்கப்படுவதால் இதில் உள்ள கல்சியம் எலும்பு தொடர்பான நோய்கள் வராமல் பாதுகாக்கும். இது ஓர் போசாக்கு நிறைந்த பானமாகும்.



Palm juice எனப்படும் பதநீர் பனை மரத்திலிருந்து கிடைக்கின்ற பானம். பனைகளின் பாளைகளைச் சீவி, நுனியில் வடியும் நீரை, சுண்ணாம்பு தடவிய மண்முட்டிகளின் மூலம் சேகரிப்பார்கள். இனிப்புச் சுவையுடன் கூடிய இந்தத் திரவமே பதநீர்.

உடல் மெலிந்தவர்களுக்கு சிறந்த ஊக்கம் தரும் பானம். இது சிறுநீரகம் தொடர்பான பிரச்சினைகளான சிறுநீர் எரிச்சல் போன்ற நிலைமைகளை குணமாக்கக் கூடியது. வெயில் காலங்களில் வரக்கூடிய நீர்க்கடுப்பு, சிறுநீர் வெளியேறும் பாதையில் வலி போன்றவற்றை குணமாக்கும். இதிலடங்கியுள்ள இரசாயனச் சத்துக்களுக்கு தாபமகற்றி ( Anti inflammatory) குணங்கள் உண்டு. அவை உடலில் ஏற்படும் வீக்கத்தைக் குறைத்து நல்ல ஆரோக்கியம் தரும். இதிலடங்கியுள்ள கல்சியம் மற்றும் மக்னீசியம் சத்துக்கள் என்புகளுக்கு வலுவும், ஆரோக்கியமும் தருகின்றன. இதிலுள்ள விற்றமின்கள், ஆன்டிஒக்சிடன் தோலுக்கு ஆரோக்கியத்தை கொடுக்கும். தோலில் சுருக்கங்கள் ஏற்படுவதை தடுக்கும் ஆற்றலும் உண்டு. இதிலுள்ள உயிர்ச்சத்து C நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கின்றது. நோய்களை எதிர்த்துப் போராடும் தன்மை உண்டு.

நாட்பட்ட வியாதிகள் வராமல் உடலைப் பாதுகாக்கின்றது. இதிலுள்ள நார்ச்சத்துக்கள் செரிமானம் சிறப்பாக நடைபெற உதவுகிறது. பதனீரில் இயற்கையாக நிறைந்துள்ள இனிப்புச் சத்தானது உடலுக்கு உடனடிச் சக்தியை அளிக்கின்றது. மேலும் இதிலுள்ள பொட்டாசியம் போன்ற கனிமச் சத்துக்களில் உள்ள எலக்ட்ரோலைட்டுக்கள் உடலை நீரேற்றத்துடன் வைக்க உதவி புரிகின்றது.

அத்துடன் பதநீரில் உயிர்ச்சத்து B மற்றும் பொஸ்பரஸ் சத்துக்களும் காணப்படுகிறன.

தாய்ப்பாலுக்கு ஈடான ஊட்டச்சத்துக்கள் நிறைந்த பானம். இரத்த அழுத்தத்தை சீராக பேணும் ஆற்றலும் உண்டு. குறைந்தளவு கலோரிப் பெறுமானத்தைக் கொண்டது. அத்தியாவசிய அமினோ அமிலங்களும் காணப்படுவதால் உடலின் நிர்ப்பீடன சக்தியை அதிகரிக்க வல்லது. இத்தனை நற் பயன்கள் நிறைந்த பதநீரை அது தாராளமாகக் கிடைக்கக் கூடிய கோடைக் காலத்தில் அடிக்கடி வாங்கிக் குடித்து ஆரோக்கியம் பெற வேண்டும்.

மஞ்சளைப் பொடித்து அரைத் தேக்கரண்டி அளவு எடுத்து 50 மில்லி காலையில் இறக்கிய பதநீரில் கலக்கி உட்கொள்ள வயிற்றுப் புண், தொண்டைப்புண், சீதக் கழிச்சல் நீங்கும். கோடைக் காலத்தில் அதிகப்படியான வெயிலால் ஏற்படும் சோர்வை தணிக்கக் கூடியது பதநீராகும்.

பொதுவாக சித்த மருத்துவத்தில் இது ஓர் குளிர்ச்சியைக் கொடுக்கும் பானமாகும். உடலில் அதிகரித்த உஷ்ணத்தை தணிக்கக் கூடியதாகவும் தோலில் ஏற்படும் நமைச்சல் மற்றும் எரிச்சலைத் தணிக்கவும் பரிந்துரைக்கப்படுகிறது.

அத்துடன் மலமிளக்கியாகவும் பயன்படுத்தப்படுகிறது. பெரும்பாலும் வெறும் வயிற்றில் அருந்தும் போது சிறந்த பலனைக் கொடுக்கும்.

பதநீர் வயோதிபத்திற்கு எதிரானது. இளமையாக இருக்க உதவுகிறது. ஆண்களின் விந்துக்களில் உள்ள உயிரணு குறைபாட்டை சரி செய்யும். பதநீரில் இருக்கும் கல்சியம், இரும்பு, அமினோ அமிலம் மற்றும் புரதச் சத்துக்கள் இக் குறைபாட்டை நீக்கும், இனிப்புச் சுவையுடைய அல்கோகோல் அற்ற பானமே பதநீராகும் பதநீர் மருத்துவ குணங்கள் நிறைந்த போதை தராத பானமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 752





உன் தாயை மணம் செய்து கொடுப்பதற்கு முதல் நாள் அவளைத் தனியாக அழைத்து என்ன சொன்னேன்? கேள், கரிகாலா! 'மகளே! மாநிலம் புரக்கப் போகும் மன்னனை நீ மணந்து கொள்ளப் போகிறாய்! அதற்காகவும் நீ கர்வம் அடையாதே! அவ்வளவு புகழ் வாய்ந்த கணவனை மணந்து கொள்வதினால் உனக்குக் கஷ்டம் தான் அதிகமாயிருக்கும். உன் அரண்மனையில் பணி செய்யும் பணிப்பெண்கள் பலரும் உன்னைக் காட்டிலும் சந்தோஷமாயிருப்பார்கள்.

துக்கப்படுவதற்கும் வேதனைப்படுவதற்கும் உன்னை நீ ஆயத்தம் செய்து கொள். உனக்குக் குழந்தைகள் பிறக்காவிட்டால் உன் புருஷன் வேறு ஸ்திரீகளை கட்டாயம் மணந்து கொள்வான். அதை நினைத்து நீ வேதனைப்படக் கூடாது. உனக்கு மக்கள் பிறந்தால் அவர்களை வீர மக்களாய் நீ வளர்க்க வேண்டும். அவர்கள் போர்க்களத்தில் உயிர் விட்டதாகச் செய்தி வந்தால் ஒரு சொட்டுக் கண்ணீர் கூட விடக் கூடாது.

உன் கணவன் சந்தோஷமாயிருந்தால் நீயும் சந்தோஷமாயிரு! உன் புருஷன் துக்கப்பட்டால் நீ அவனைச் சந்தோஷப்படுத்தப் பார்! உன் பதி நோய்ப்பட்டால் நீ அவனுக்குப் பணிவிடை செய்! உன் கணவன் இறந்தால் நீயும் உடன்கட்டை ஏறிவிடு! உன் நெஞ்சில் உதிரம் கொட்டினாலும் உன் கண்களில் மட்டும் கண்ணீர் சொட்டக் கூடாது! மலையமான் வம்சத்தில் பெண்களுடைய கலாசாரம் இது!' என்று இவ்விதம் உன் அன்னைக்குப் புத்திமதி கூறினேன்.

அம்மாதிரியே உன் அன்னை இன்று வரை நடந்து வருகிறாள் நடத்தி வருகிறாள். கரிகாலா! உன்னையும் உன் சகோதரனையும் இணையில்லாத வீரர்களாக வளர்த்து வந்திருக்கிறாள். உன் தந்தை நோய்ப்பட்ட பின்னர் இரவு பகல் அவர் பக்கத்திலிருந்து அவளே எல்லாப் பணிவிடைகளையும் செய்து வருகிறாள். உன் அன்னையை என் மகளாகப் பெற்றதை நினைக்கும்போதெல்லாம் என் தோள்கள் பூரிக்கின்றன!" என்றார் மலையமான்.

"தாத்தா! என் தாயை நினைக்கும்போதெல்லாம் நான் அடையும் பெருமிதத்துக்கும் அளவில்லை. ஆனால் ஒன்று கேட்கிறேன் சொல்லுங்கள்! என் தந்தையின் கொடிய பகைவன் ஒருவன் அவரைக் கொல்லுவதற்குக் கத்தியை ஓங்கிக் கொண்டு வருவதாக வைத்துக் கொள்ளுங்கள். என் தாயார் அப்பொழுது என்ன செய்வாள்? முன்னால் நின்று கண்ணீர் பெருக்கிக் கணவனைக் காப்பாற்றும்படி அப் பகைவனை வேண்டிக் கொள்வாளா? முக்கியமாக, அப்படி வருகிற பகைவன் என் அன்னைக்குத் தெரிந்தவனாகவும் இருந்து விட்டால்"


"குழந்தாய்! உன் தாயார் ஒரு நாளும் அப்படிப் பகைவனிடம் உயிர்ப்பிச்சை கேட்கமாட்டாள். மலையமான் மகள் அவ்விதம் ஒருகாலும் தான் பிறந்த குலத்தையும், புகுந்த குலத்தையும் அவமானப்படுத்தமாட்டாள். அவளுடைய புருஷனுடைய பகைவனைத் தனக்கும் கொடிய பகைவனாகவே கருதுவாள். பகைவன் முன்னால் கைகூப்பமாட்டாள் கண்ணீரும் விடமாட்டாள், கணவன் உயிர் துறந்தால் உடனே அவன் மீது விழுந்து தானும் உயிரை விடுவாள்!

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## அன்னமும் காகமும்



ஒரு பூஞ்சோலையில் அன்னப் பறவை ஒன்று இருந்தது. அதே சோலையில் ஒரு காகமும் இருந்தது.

ஒரே சோலையில் இருந்தபடியால் இரண்டும் அடிக்கடி சந்தித்துக் கொள்ளும். சந்திக்கும் போது தான், தான் கண்டது கேட்டது பற்றி ஒன்றிடம் ஒன்று சொல்லிப் பேசிக் கொள்ளும்.

ஒரு நாள் அன்னம் எங்கோ போய்த் திரும்பி வந்தது. சிறிது நேரத்திற்குப் பின் அது திரும்பவும் புறப்பட்டது. "அன்னம்மா, எங்கே புறப்பட்டு விட்டாய்?" என்று காகம் கேட்டது.

"காக்கையண்ணா, இந்தச் சோலையை அடுத்தாற்போல் அழகான குளம் ஒன்று இருக்கிறது. அங்கே சிவப்புச் சிவப்பாகவும் வெள்ளை வெள்ளையாகவும் அழகான தாமரைப் பூக்கள் மலர்ந்து விளங்குகின்றன. அவை அந்தக் குளத்தின் அழகை அதிகப்படுத்துகின்றன. அந்தக் குளத்திலேயே மிதந்து திரிந்து தென்றல் காற்றை அனுபவித்துக் கொண்டிருந்தாலே போதும், அதைக் காட்டிலும் இன்பம் வேறு கிடையாது. அந்தத் தாமரைக் குளத்துக்குத் தான் நான் போகிறேன். நீங்களும் வருகிறீர்களா?" என்று கேட்டது அன்னப் பறவை.

"அவ்வளவு அழகான குளமா? அப்படியானால் வருகிறேன்," என்று காகமும் அன்னத்துடன் புறப்பட்டது. அவை போகும் வழியில் காற்றில் அழுகிய பிணத்தின் நாற்றம் கலந்து வந்தது. காட்டுப் புறத்தில் ஒரிடத்தில் ஒரு கழுதை செத்துக் கிடந்தது. செத்து நான்கைந்து நாளாகி விட்டபடியால் அது அழுகி நாற்றமெடுத்தது. காற்றில் வந்த அந்த நாற்றத்தை உணர்ந்ததும் காகம் அன்னத்தை நோக்கி "அன்னம்மா, தாமரைக் குளத்திற்கு நீ போ. நான் வரவில்லை" என்று கூறி விட்டுப் பறந்தது. நேராகக் கழுதை அழுகிக் கிடந்த இடத்திற்குச் சென்றது. அழுகிய பிணத்தைக் கொத்தித் தின்று கொண்டே, "இந்த இன்பம் கிடைக்குமா தாமரைக் குளத்தில்" என்று தன் மனதுக் குள்ளேயே கூறிக் கொண்டது.

கருத்துரை :- அன்னம் தாமரைக் குளத்தை நாடுவது போல் கற்றோரைக் கற்றோர் விரும்புவர். காக்கை அழுகிய பிணத்தை விரும்புவது போல், தீயோரைத் தீயோரே விரும்பிச் சேர்வர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித நேயத்தோடு மக்களின் உணர்வைப் புரிந்து கொண்டால், தனது மரியாதை தானே உயரும்.
– அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## ஈஸ்ரர் குண்டுத் தாக்குதல் உண்மை வெளிப்படும் தருணம்

2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி ஈஸ்ரர் பெருநாள். இயேசுபிரான் உயிர்த்தெழுந்த அப் புனிதமான தினத்தில் தேவாலயங்களில் கத்தோலிக்க மக்கள் பிரார்த்தனையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இறைவனை நோக்கிய வழிபாடு நடந்து கொண்டிருக்கும் அந்த வேளையில், எந்த ஈனர்களும் செய்ய விரும்பாத கொடும் பாதகம் நடந்தாகிறது.

அந்தோ கொடுமை. கொழும்பு, நீர்கொழும்பு, மட்டக்களப்பு ஆகிய இடங்களில் தேவாலயங்கள் மற்றும் விடுதிகளில் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் நடந்தாகின்றன.

ஒரு கணப்பொழுதில் தேவாலயத்தின் கூரைகள் சிதறிக் கிடக்கின்றன. எங்கும் மரண ஓலங்கள்.

இறந்து கிடக்கின்ற தனது தாய் அருகே நின்று அழுகின்ற பச்சிளம் குழந்தையின் பரிதாபம் கண்டு இந்த உலகமே அழுதது.

ஏன்? எதற்காக? என்ற காரண காரியம் எதுவுமின்றி நடந்து முடிந்த அந்தத் தற்கொலைக் குண்டுத் தாக்குதலில் 277 பேர் உயிரிழந்தனர்.

இதில் வெளிநாட்டுப் பிரஜைகள் 45 பேர் அடங்குவர். ஒவ்வொரு மரணமும் ஒரு பெரும் துயர வரலாற்றை பதிவாக்கியது.

இந்தக் கொடூரம் நடந்து இன்று ஆறு வருடங்கள் நிறைவடைகின்றன.

எனினும் இதுவரை ஆட்சியில் இருந்தவர்கள் ஈஸ்ரர் தற்கொலைக் குண்டுத் தாக்குதல் குறித்த விசாரணைகளை நடத்துவதிலும் உண்மையான சூத்திரதாரிகள் யார் என்பதைக் கண்டறிவதிலும் கவனமற்று இருந்தன் தாற்பரியம்தான் புரியவில்லை.

ஈஸ்ரர் குண்டுத் தாக்குதல் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டுமென்பதில், கொழும்பு கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை மிகவும் உறுதியாக இருந்தார்.

ஆயினும் ஆட்சியாளர்கள் ஈஸ்ரர் குண்டுத் தாக்குதலை அப்படியே அமுக்கி விடுவதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்தனர்.

எனினும் இப்போது ஜனாதிபதி அநுர குமார திசாநாயக்கவின் அரசாங்கம் பதவியேற்றுள்ளது.

கடந்த கால ஆட்சியாளர்களின் கொடுஞ் செயல்களால் விரக்தியடைந்த மக்கள் அநுர குமார திசாநாயக்கவை ஜனாதிபதியாக்கினர்.

எனவே ஈஸ்ரர் குண்டுத் தாக்குதலின் சூத்திரதாரிகள் யாவர், அதன் பின்னணி, தாக்குதல் தொடர்பில் புலனாய்வுத்துறைக்குத் தகவல் கிடைத்தும் உரிய நடவடிக்கை எடுக்கப்படாமைக்கான காரணம் என்ன? என்றவாறு ஒரு முழுமையான விசாரணை அறிக்கையை அநுர அரசாங்கம் வெளிப்படுத்தும் என்ற நம்பிக்கை மக்களிடம் உண்டு.

எனவே ஈஸ்ரர் குண்டுத் தாக்குதல் குறித்த உண்மைத் தன்மையைப் பகிரங்கப்படுத்துகின்ற தார்மீகப் பொறுப்பு அநுர அரசாங்கத்துக்கு இருப்பதும் அதற்கான தருணம் இது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

### கருணா ஊழல் வாதி; பிள்ளையான் கடத்தல்காரன்

## பிரபாகரன் தம்மைக் கொன்று விடுவார் என்ற அச்சத்திலேயே எம்மிடம் சரணடைந்தனர்

### சரத் பொன்சேகா விளாசல்

(கொழும்பு)

பிள்ளையான், கருணா இருவரும் ஊழல், ஆட்கடத்தல் செய்துவிட்டு பிரபாகரனுக்குப் பயந்து அங்கிருந்து ஓடி வந்தவர்கள். இவர்கள் உண்மையான வீரர்கள் இல்லை என்று முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகத்துக்கு வழங்கிய பேட்டி ஒன்றிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

பிரபாகரன் ஒருபோதும் ஊழல் மோசடிகளை ஆதரிக்காத ஒருவராகவே இருந்தார். நிதி மோசடி செய்பவர்கள், துரோகம் செய்பவர்களுக்கு அவர் அதிகபட்சமாக மரணதண்டனை வழங்கினார்.

கருணாவின் ஊழல்கள் தொடர்பில் அறிந்த பிரபாகரன் அவரைக் கிளிநொச்சிக்கு அழைத்த போது அவர் கொன்று விடுவார் என்று தப்பி ஓடிய நபர்தான் இந்த கருணா.

இதேவேளை பிள்ளையான் 150 பேருடன் சுங்காவில் பகுதியில் முகாமொன்றில் இருந்தார். நாங்கள் அவர்களை எம்மிடம் சரணடையுமாறு கோரினோம். அவ்வாறு சரணடைந்தவர்களில் 80 பேர் வரையிலானோர் 13 வயதுக்கும் குறைவானவர்களாகவே இருந்தனர். அவர்களை ஐ.சி.ஆர்.சியிடம் ஒப்படைத்தோம்.

எஞ்சியவர்களை நாங்கள் பாதுகாப்பு வழங்கிப் பார்த்துக்கொண்டோம். ஆகவே பிள்ளையான் யுத்தம் செய்யவில்லை. ஆட்கடத்தல்கள் செய்துள்ளார்.

இவர்கள் உண்மையான வீரர்கள் இல்லை. பிள்ளையான், கருணா இருவரும் ஊழல் செய்துவிட்டு புலிகளுக்கு பயத்தில் அங்கிருந்து ஓடி வந்தவர்கள் விடுதலைப் புலிகள் அமைப்பில் கிழக்கைச் சேர்ந்த ரமேஷ் என்பவர் இருந்தார். அவர் கருணாவை விட திறமையானவர். அவருடன் நாம் கிழக்கில் போரிட்டோம்.

இது இவ்வாறிருக்க இப்போது இவர்களை வீரர்கள் என்று கம்மன்பில போன்றோர் கூறுகின்றனர். கம்மன்பில எதுவும் தெரியாதவர். யுத்த காலத்தில் எங்கேயோ இருந்தவர் இப்போது வந்து ஏதோ கூறுகின்றார்.

இப்படியான ஒருவரை வீரர் என்று கம்மன்பில போன்றவர்கள் கூறுவது தெற்கில் உள்ளவர்களுக்கே வெட்கக்கேடானது என்றார். (ம-7)

## துரித கதியில் இடம்பெறும் வாக்குச்சீட்டு அச்சிடுப் பணி

### அரச அச்சக மா அதிபர் தகவல்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான அனைத்து வாக்குச் சீட்டுக்களையும் எதிர்வரும் 30 ஆம் திகதிக்குள் அச்சிட்டு தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கையளிப்பதற்கு எதிர்பார்ப்பதாக அரச அச்சக மா அதிபர் பிரதீப் புஷ்பகுமார தெரிவித்துள்ளார்.

அத்துடன் நீதிமன்றத் தீர்ப்பிற்கமைய 102 உள்ளூராட்சி மன்றங்களுக்கான தபால் வாக்குச்சீட்டுக்களை மீண்டும் அச்சிட வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில் அனைத்துத் தபால் வாக்குச்சீட்டுகளும் அச்சிடப்பட்டு தேர்தல்கள் ஆணைக்குழுவிடம் கையளிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக அரச அச்சக மா அதிபர் பிரதீப் புஷ்பகுமார தெரிவித்துள்ளார். (ம-7)

## கல்விச் சீர்திருத்தங்கள் அடுத்தாண்டில் அமுலாகும்

### பிரதமர் ஹரிணி உறுதி

அடுத்த ஆண்டு பல புதிய கல்விச் சீர்திருத்தங்கள் நடைமுறைப்படுத்தப்படும் என பிரதமரும், கல்வி அமைச்சருமான கலாநிதி ஹரிணி அமரசூரிய தெரிவித்துள்ளார்.

வவுனியா, ஈரப்பெரியகுளத்தில் நேற்று (20) இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், 2026ஆம் ஆண்டில் பல புதிய கல்விச் சீர்திருத்தங்கள் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

புதிய கல்விச் சீர்திருத்த செயல்முறை மற்றும் அரசாங்கக் கொள்கைகளை செயற்படுத்துவது குறித்து தற்போது ஆராயப்பட்டு வருகின்றது. நவீன காலத்திற்கு ஏற்றவாறு கல்விக் கொள்கை மறுசீரமைக்கப்படும். நாட்டின் கல்வித்தரம் உயர்வதற்கான வழிவகைகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என்றார். (ம-7)

## மக்களை அச்சுறுத்தி வாக்கு வாங்கும் ஜனாதிபதி

### முஜிபுர் ரஹ்மான் எம்.பி சாடல்

மக்களை அச்சுறுத்தி வாக்குகளைப் பெற்றுக் கொள்ளும் நடவடிக்கையில் ஜனாதிபதி ஈடுபட்டுள்ளதாகப் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் குற்றம் சாட்டியுள்ளார்.

எதுல்கோட்டைப் பகுதியில் உள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த காலங்களில் தேர்தல் மேடைகளில் உள்ளூராட்சி மன்றங்களுக்கான நிதி ஒதுக்கீடு தொடர்பில் கருத்துரைத்த ஜனாதிபதி தற்போது மாறுபட்ட கருத்தை வெளியிடுவதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் இதன் போது சுட்டிக் காட்டினார். (ம-7)

### மாவடி ஞான வைரவரின்

## மண்டலாபிஷேக பூர்த்தியும் நவோத்திர சங்காபிஷேகமும்

சங்கானை மாவடி ஞானவைரவர் ஆலய மண்டலாபிஷேகப் பூர்த்தியும் சங்காபிஷேகமும் இன்று திங்கட்கிழமை காலை முதல் பக்தி பூர்வமாக இடம்பெறவுள்ளது.

காலை 7.30 மணியளவில் வைரவப் பெருமானுக்கும் சாமுண்டா தேவிக்கும் நவோத்திர சங்காபிஷேகமும் தொடர்ந்து விஷேட திரவிய அபிஷேகம், திரவிய ஹோமம் என்பன இடம்பெறும்.

மாலை 7 மணியளவில் விஷேட வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து திருக்கல்யாணம் நடைபெற்று சாமுண்டா தேவிக்கு மாங்கல்யதாரணத்தைத் தொடர்ந்து ஊஞ்சல் நிகழ்வு நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து சாமுண்டாதேவி சமேதராய் ஞான வைரவப் பெருமான் அழகிய பூந்தண்டிகையில் திருவீதி உலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலிக்கவுள்ளார். (ம-7)

## ஆளுங்கட்சியின் பிரசார அலுவலகத்திற்கு தீ வைப்பு

### கிளி.முரசுமோட்டையில் சம்பவம்

கிளிநொச்சியில் தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் பிரசார அலுவலகம் ஒன்று தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

நேற்று இடம்பெற்ற குறித்த சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

கிளிநொச்சி கரைச்சி பிரதேச சபையின் முரசுமோட்டை வட்டாரத்துக்காக மூன்று நாட்களுக்கு முன்னர் திறந்து வைக்கப்பட்ட தேர்தல் பிரசார அலுவலகம் மீதே நேற்று அதிகாலை இனந்தெரியாதோரினால் தீ வைக்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு விரைந்த கிளிநொச்சிப் பொலிஸார் மற்றும் மாவட்ட தடயவியல் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'விசுவாவசு வருஷ' புத்தாண்டு பலன்கள்

## அனைவரையும் சரிசமமாக மதித்து நடத்தும் துலா ராசி நேயர்களே!



**கிரகநிலை** - இராசியில் சந்திரன் - பஞ்சம ஸ்தானத்தில் சனி - ரண ருண ரோக ஸ்தானத்தில் ராகு, சுக்கிரன் (வ), புதன் - களத்திர ஸ்தானத்தில் சூரியன் - அஷ்டம ஸ்தானத்தில் குரு - தொழில் ஸ்தானத்தில் செவ்வாய் - அயன சயன போக ஸ்தானத்தில் கேது என வலம் வருகிறார்கள்.

**கிரகமாற்றங்கள்:** 26-04-2025 அன்று ராகு பகவான் ரண ருண ரோக ஸ்தானத்தில் இருந்து பஞ்சம ஸ்தானத்திற்கு மாறுகிறார் ; 26-04-2025 அன்று கேது பகவான் அயன சயன போக ஸ்தானத்தில் இருந்து லாப ஸ்தானத்திற்கு மாறுகிறார் ; 02-07-2025 அன்று சனி பகவான் வக்கிர நிலை ஆரம்பம். 17-11-2025 அன்று சனி பகவான் வக்கிர நிவர்த்தி அடைகிறார். 06-03-2026 அன்று சனி பகவான் பஞ்சம ஸ்தானத்தில் இருந்து ரண ருண ரோக ஸ்தானத்திற்கு மாறுகிறார் .

11-05-2025 அன்று குரு பகவான் அஷ்டம ஸ்தானத்தில் இருந்து பாக்கிய ஸ்தானத்திற்கு மாறுகிறார். 08-10-2025 அன்று குரு பகவான் பாக்கிய ஸ்தானத்தில் இருந்து தொழில் ஸ்தானத்திற்கு மாறுகிறார். 18-11-2025 அன்று குரு பகவான் வக்கிரம் ஆரம்பம். 21-12-2025 அன்று வக்கிர நிலையில் இருக்கும் குரு பகவான் தொழில் ஸ்தானத்தில் இருந்து பாக்கிய ஸ்தானத்திற்கு மாறுகிறார். 17-03-2026 அன்று குரு பகவான் வக்கிர நிவர்த்தி

**பலன்கள்:** அனைவரையும் சரிசமமாக மதித்து நடத்தும் துலா இராசி நேயர்களே! குடும்பத்தில் நிம்மதி நிலவும். குடும்பத் தாருடன் சந்தோஷமாக பொழுதைக் கழிப்பீர்கள். குடும்பத்தில் உங்கள் மதிப்பு மரியாதை உயரும். தாயின் உடல்நிலை சீர்படும். உற்றார் உறவினர்கள் குறிப்பாக, மாமன் வகையில் இருந்து வந்த கசப்புகள் நீங்கி சுமுகமான உறவு உண்டாகும்.

புதிய வீடு, மனை வாகனம் வாங்கும் யோகம் உண்டாகும். சிலர் குடியிருக்கும் வீட்டைவிட்டு சற்று கூடுதல் வசதியான வீடு களுக்கு மாறுவர். புதிய ஆடை ஆபர ணங்கள் வாங்கும் யோகம் உண் டாகும். தெளிந்த அறிவால் சமுதாயத்தில் உயர்ந்த இடத்தில் வைத்துப் புகழப்படுவர். மேலும் சமுதாயத்திற்கு நல்ல வழி காட்டியாகவும் இருப்பர்.

சிலருக்கு வெளியூர், வெளி நாடுகளுக்கு செல்லும் நிலை ஏற்படும். பொருளாதாரம் படிப் படியாக உயரும். அதனால் பழைய கடன்களை அடைக்கத் தொடங்குவர். அநாவசியச் செல வுகள் குறைந்து அவைகள் சுபச் செலவுகளாக முடியும். ஆன்மிகத் தில் பற்றுள்ளவர்கள் பெரிய வர்களைச் சந் தித்து ஆசிகளைப் பெறுவர். தியானம், யோகா போன்றவற்றில் பற்று ஏற்பட்டு அதில் சாதனை களைச் செய்வர். உங்களின் மனோபலம் சற்று குறையும். அநாவசிய விடயங்க ளில் மனதைக் குழப்பிக் கொள் வர். சிறிய அளவில் பொருளிழப்பு ஏற்படும். சிலருக்கு விஷ ஜந்துக் களால் ஏற்படும் உபாதையால் மருத்துவச் செலவும் உண்டா கும்.

உங்களின் நுண் ணறிவு வெளிப்படும். மேலும் பேச்சுத் திறமைக்கும் மதிப்பு ஏற்படும். புதிய யுக்திகளில் பணம் சம் பாதிக்கும் யோகமும் உண்டு. உங்களுக்கு கீழ் வேலை செய் பவர்களை அரவணைத்துச் செல்லவும். செயல்களில் பொறு மையுடன் செயலாற்றி வெற்றி யுடன் முடிப்பர். ஷேர் மார்க்கெட் போன்ற துறைகளில் பெரிய இலாபத்தை இதே கால கட்டத்தில் எதிர்பார்க்க முடியாது என்றால் மிகையாகாது.

**உத்தியோகஸ்தர்கள்** பயணங்களால் பணவரவைக் காண்பார்கள். பிரச்சினை களுக்கு நிரந்தர தீர்வு காண முடியாவிட்டாலும் தற்காலிகத் தீர்வு கிடைக்கும். அலுவலக ங்களில் வேலைப் பளு சற்று கூடுதலாகவே இருக்கும். பதவி உயர்வும் கிடைக்கும். மற்றவர் கள் பார்த்துப் பொறாமைப்படும் அளவிற்கு, நடந்து கொள்வர். கொடுத்த பொறுப்புகளைத் தட்டிக் கழிக்காமல் பொறுப்புடனும் நிதானத்துடன் செய்து முடிப் பீர்கள்.

**வியாபாரிகள்-** எதையும் ஒரு முறைக்கு இருமுறை யோசித்துச் செய்யவும். காரி யங்கள் அனைத்தையும் உங் கள் கட்டுப் பாட்டுக்குள் வைத்துக் கொள்ளவும். கூட்டாளிகளிடம் கலந்தாலோசித்த பிறகு முக்கிய முடிவுகள் எடுக்கவும். பணவிஷயங்களில் எச்சரிக்கை தேவை.




**அரசியல்வாதிகள்:** தங்கள் செயல்களைத் திட்டமிட்டு செயற்படுத்துவர். மக்களின் பிரச்சினைகளில் கவனம் செலுத்துவர். சம்பந்தமில்லாத விஷயங்களில் உங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டாம்.

**கலைத்துறையினர்:** புகழ் கூடும். எதிர்பார்த்த இடங்களிலிருந்து உதவி கிடைக் கும். உங்கள் முயற்சியும் உழைப்பும் வெற்றியைத் தேடித் தரும். நிதானப்போக்கினால் பெரிய முன்னேற்றத்திற்கு வழியை தேடித்தரும். புதிய வாய்ப்புகள் புகழுடன் வரு மானத்தையும் கொண்டு வரும். ரசிகர்களால் எதிர்பார்த்த அள வுக்கு நன்மைகள் இருக்காது.

**பெண்கள்:** மனநிம்மதி யைக் காண்பார்கள். தெய்வ வழிபாட்டிலும் தர்மகாரியங் களிலும் ஈடுபடுவர். புதிய சொத்து வாங்க ஆரம்பக்கட்ட வேலை களைத் துவக்குவர். குடும்பத் தினருடன் சந்தோஷமாக பொழுதைக் கழிப்பார்கள். கணவருடன் ஒற்றுமையை காண்பதுடன் குடும்பப் பொறுப் புகளையும் சிறப்பாக நிறை வேற்றுவர்.

**மாணவர்கள்:** நினை வாற்றல் அதிகரிக்கும். கூடுதல் மதிப்பெண்களைப் பெறுவர். மனதிற்குப்பிடித்த விளை யாட்டுகளிலும் கேளிக்கைகளி லும் ஈடுபடுவர். பெற்றோர் களும் ஆசிரியர்களும் உங்கள் கோரிக்கைகளை நிறைவேற் றுவர். மேலும் நண்பர்களிடம் எச்சரிக்கையுடன் நடந்து கொள் ளுங்கள். புதிய நண்பர்களுடன் ஓரளவுக்குமேல் நட்பு கொள்ள வேண்டாம்.

**சித்திரை 3, 4 பாதங் கள்:** இந்த ஆண்டு சீரான பலனை எதிர்பார்க்கலாம். உங்கள் முயற்சிக்கு தகுந்த பலன்கள் வந்தே தீரும். வழக்கு விவகாரங்கள் மேலும் தள்ளிப் போகும். எல்லாம் நல்லதே நடக்கும்.

**சுவாதி:** இந்த ஆண்டு வீண் கலகமும் அலைச்சலும் இருக்கும், இருப்பினும் குருவின் பார்வை தைரிய வீர்ய ஸ்தான ராசியில் விழுவதால் காரிய அனுகூலமும் நற்சுகமும் பொரு ளாதார மேம்பாடும் உண் டாகும். நன்மைகள் கிடைக்கும்.

**விசாகம்1, 2, 3ஆம் பாதங்கள்:** இந்த ஆண்டு மதிப்பு மரியாதை கூடி செல் வாக்கு அதிகரிக்கும். முயற்சி களில் சிறுசிறு தடைகள் வரலாம். உங்களைப் பற்றி உங்கள் குடும்பத்தார் புரிந்து கொண்டு அனுசரணையாக நடந்து கொள்வர்.

**பரிகாரம்:** வெள்ளி தோறும் அருகிலிருக்கும் பெரு மாள் கோவிலுக்குச் சென்று ஸ்ரீகருடனை வணங்கி வர வும். நெய் விளக்கு ஏற்றலாம். தினமும் முன்னோர்களை வணங்கவும்.

வெள்ளிக் கிழமைதோறும் வில்வ இலையை சிவனுக்கு சாத்தி வழிபட்டு வர உங்கள் துக்கங்கள் சந்தோஷமாக மாறும். மேற்கு, தெற்கு ஆகிய திசைகள் அனுகூலமாக இருக்கும். சந்திரன் - குரு - சுக்கிரன் நன்மைகளை அள்ளித் தரும்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விபரீத...

நேற்று மரணமடைந்துள்ளார்.

இதில் சாவகச்சேரி நுணாவிலைச் சேர்ந்த பரராசசிங்கம் பாஸ்கரன் (வயது-50) என்ற 5 பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார்.

கடந்த வெள்ளிக்கிழமை (18) நஞ்சருந்திய நிலையில் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (20) சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம்தொடர்பில்யாழ்போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிரேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,4,60)

## ஈஸ்ரர்...

2019ஆம் ஆண்டு ஏப்ரல் 21ஆம் திகதி நாடு முழுவதும் உள்ள 3 தேவாலயங்கள் மற்றும் கொழும்பிலுள்ள பிரதான விருந்தகங்கள் என்பவற்றில் நடத்தப்பட்ட தற்கொலைக் குண்டுத் தாக்குதல்கள் இடம்பெற்று இன்றுடன் ஆறு ஆண்டுகள் நிறைவடைகிறது.

பாதிக்கப்பட்டவர்களை நினைவுகூரும் வகையில் நாடு முழுவதும் பல இடங்களில் அஞ்சலி செலுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அதன்படி, உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் 6ஆம் ஆண்டு நிறைவின் பிரதான நினைவேந்தல் இன்று காலை 7 மணிக்கு கொட்டாஞ்சேனை புனித லூசியாஸ் பேராலயத்தில் இருந்து பிரார்த்தனை ஊர்வலம் தொடங்கி, கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தைச் சென்றடையும்.

காலை 8.30க்கு கொச்சிக்கடை புனித அந்தோனியார் தேவாலயத்தில், பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் தலைமையில் விசேட ஆராதனையானது நடைபெறும்.

காலை 8:45க்கு அனைத்து மத ஸ்தலங்களிலும் மணிகள் ஒலிக்கப்பட்டு இரண்டு நிமிட மௌன அஞ்சலி செலுத்தப்படவுள்ளது. (ம-7,4)

## வடமராட்சி...

உடுத்துறைப் பகுதியைச் சேர்ந்த நபர் ஒருவரின் வீட்டிற்கு ஆழியவளை பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவர் சென்று கலந்துரையாடியபோது அது வாக்குவாதமாக மாறி இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

வாள்வெட்டில் படுகாயமடைந்த ஆழியவளையைச் சேர்ந்த குடும்பஸ்தர் மருதங்கேணி வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக பருத்தித்துறை வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பாக மருதங்கேணி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-7,4)

## யாழ்ப்பாணம்...

இதில் செம்பியன்பற்று வடக்கைச் சேர்ந்த சின்னத்தம்பி குணதேவி (வயது-69) என்ற பெண்ணே அடித்துக் கொலை செய்யப்பட்டவராவார்.

ஓய்வுநிலை ஆசிரியையான சகோதரியுடன் குறித்த பெண் வசித்து வருகின்றார்.

குறித்த ஆசிரியை நேற்றுக் காலை உயிர்த்த ஞாயிறு பிரார்த்தனைக்காக அருகிலுள்ள தேவாலயத்திற்குச் சென்றுள்ளார். மற்றைய பெண் வீட்டில் தனிமையில் இருந்துள்ளார்.

இந்நிலையில் இரு பெண்களும் தேவாலயத்திற்கு சென்றுள்ளார்கள் என நினைத்து, இளைஞன் ஒருவர் வீட்டினுள் களவுக்குச் சென்றுள்ளார்.

அவ்வேளை வீட்டில் இருந்த பெண் இளைஞன் களவில் ஈடுபடுவதனை அவதானித்ததையடுத்து இளைஞன் பொல்லினால் குறித்த பெண்ணின் தலையில் பலமாகத் தாக்கிவிட்டு தப்பிச் சென்றுள்ளார்.

இரத்த வெள்ளத்தில் வீழ்ந்த பெண் உயிரிழந்துள்ளார்.

அந்நிலையில், தேவாலயத்திற்குச் சென்ற மற்றைய பெண் வீட்டிற்கு வந்தபோது இரத்த வெள்ளத்தில் சகோதரி சடலமாகக் காணப்பட்டதனை அவதானித்து அயலவர்களுக்குத் தகவல் தெரிவித்துள்ளார்.

அதனையடுத்து அயலவர்கள் பொலிஸாருக்குத் தகவல் வழங்கியதையடுத்து, சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்ததுடன், சடலத்தை மீட்டு உடற்கூற்றுப் பரிசோதனைக்காகவைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த தடயவியல் பொலிஸார் அயல் வீட்டு இளைஞனைக் கைது செய்துள்ளனர். (ம-7,4,33,60)

## நெடுங்கேணி...

மார்க்கங்களில் மின் துண்டிக்கப்பட்டதாக பிரதேச மக்கள் குற்றம் சுமத்தினர்.

பிரதமரின் வருகைக்காக அமைக்கப்பட்டிருந்த மேடைப் பகுதியில் பாதுகாப்புக் காரணங்களுக்காக பொருத்தப்பட்ட கருவிகளுக்கும் மற்றும் குறித்த பிரதேசத்தில் மின்சாரம் தடையின்றிக் கிடைக்க வேண்டும் என்பதற்காகவே பட்டிக்குடியிருப்பு, மாராயிலுப்பை, ஒலுமடு போன்ற பிரதேசங்களுக்கான மின்சார விநியோக மார்க்கங்கள் துண்டிக்கப்பட்டு நெடுங்கேணி நகர மத்திக்கு மாத்திரம் மின்சாரம் வழங்கப்பட்டதாகவும் பிரதேச மக்கள்தெரிவித்தனர்.

இச்செயற்பாட்டில் பொலிஸார் மற்றும் மின்சார சபை ஊழியர்கள் ஈடுபட்டிருந்ததாகவும் பொதுமக்கள் குற்றம் சாட்டியிருந்தனர்.

இது தொடர்பில் ஏனைய கட்சிப் பிரதிநிதிகளினால் தேர்தல் முறைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் மின்சார சபையின் முறைப்பாட்டுப் பிரிவோடு தொடர்பு கொண்டு கேட்ட போது,

நெடுங்கேணிப் பிரதேசத்தின் உயர் மின் மார்க்கத்தில்தென்னை மரத்தின் ஓலை ஒன்று அழுத்திய நிலையில் காணப்பட்டமையினால் குறித்த பிரதேசங்களுக்கான மின்சாரம் இடையிடையே துண்டிக்கப்பட்டு வருவதாக கிடைத்த முறைப்பாட்டின் பிரகாரம் இந்தப் பிரதேசத்திற்கான மின்சாரம் துண்டிக்கப்பட்டு அதனைச் சீர்செய்தமையே இந்த மின் துண்டிப்புக்கான காரணம் எனத் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,250)

## இணுவில்...

மஞ்சத்தடி முருகன் ஆலயத் தேர்த் திருவிழா நேற்று இடம்பெற்றது.

இதன்போது கூட்ட நெரிசலைப் பயன்படுத்தி அடியவர்களின் சுமார் நான்கு பவுண் தங்க நகைகள் பெண்கள் போல் வேடமணிந்து வந்த மட்டக்களப்பைச் சேர்ந்த நான்கு வேற்று இன, மத ஆண் திருடர்களால் திருடப்பட்டுள்ளன.

இதுதொடர்பில் சுன்னாகம் பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்ட நிலையில் பொலிஸார் துரிதமாகச் செயற்பட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய நால்வரையும் அதிரடியாகக் கைது செய்துள்ளனர். (ம-7,4)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத — திகதி 2025.04.20 — சீட்டிழுப்பு இலக்கம் 5807 — X 1 8 3 6 9 2
அத சம்பத — X 3 6 9 2 — சீட்டிழுப்பு இலக்கம் 382

தன நிதானய — திகதி 2025.04.20 — சீட்டிழுப்பு இலக்கம் 1837 — G 18 26 36 53 G — 80328

மெகா பவர் — திகதி 20/04/2025 — சீட்டிழுப்பு இலக்கம் 2155 — H 08 11 19 70 76

ஜய — திகதி 2025.04.20 — சீட்டிழுப்பு இலக்கம் 0075 — N 7 7 7 6

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4049 — சீட்டிழுப்பு திகதி 20.04.2025 — E 33 47 59 71 — E

ஹந்தஹன — சீட்டிழுப்பு திகதி 2025.04.20 — சீட்டிழுப்பு இலக்கம் 1116 — இடபம் 20 39 56 57 இடபம் — 30989 — 33

சுபிரி தன சம்பத — 20.04.2025 — 515 — U 4 4 1 0 8 1 — 63936 — ரூ.35,712,952.40

சுப்பர் போல் — சீட்டிழுப்பு வாரம் 2781 — சீட்டிழுப்பு திகதி 2025.04.20 — ஞாயிற்றுக்கிழமை — 20 23 33 80 Y — ரூ.57,029,768.00

சனிதா — 20.04.2025 — 4942 — 43 45 54 64 V — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 60,888,922.00 — 63739

சசிரி — 666 — 20.04.2025 — ஞாயிற்றுக்கிழமை — 18 28 46 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ.200,000.00

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4493 — சீட்டிழுப்பு திகதி 20.04.2025 — ஞாயிற்றுக்கிழமை — 19 40 58 59 — துலாம் — ரூ.3,387,566.40 — 189073

கப்ருக — Z 26 10 38 63 66 — 1957 — 20.04.2025 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.572,421,384.40

அத கோடிபதி — ஞாயிற்றுக்கிழமை — வெற்றி வாரம் 2607 — 2025.04.20 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.50,745,396.80 — 02 43 50 51 W — 350312

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-2757)

076 825 7716 (ஆகாஸ்)



## மாப்பிள்ளை தேவை

1. 1996, விசாகம், BSc, Engineering(Hons), Canada citizen பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை. (52360)
2. கரவெட்டி - அல்வாய், இந்து, 2000, சதயம், Pharmacist, Germany citizen பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை. (51163)
3. நெடுங்கேணி, இந்து, 1996, சுவாதி, Masters, Switzerland அழகான பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை. (51162)
4. கச்சேரியடி, இந்து, 1979, பூராடம், Graduate, UK citizen பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை. (50933)
5. இணுவில், இந்து, 1985, திருவோணம், Dental doctor, UK Citizen, Divorce பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை. (50313)
6. கோண்டாவில் - இணுவில், இந்து, 1994, விசாகம், MSc, UK citizen பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை. (50294)
7. வவுனியா - யாழ்ப்பாணம், இந்து, 1991, திருவோணம், MSc, UK citizen, Divorce பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை. (27615)
8. சங்கானை - திருகோணமலை, இந்து, 1993, பூரட்டாதி, Bank officer, Denmark citizen பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை. (49943)
9. இருபாலை, இந்து, 1993, திருவோணம், Masters, Germany citizen பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை. (49520)
10. கந்தர்மடம், இந்து, 2000, ஆயிலியம், A/L, UK citizen பெண்ணுக்கு மாப்பிள்ளை தேவை. (49449)

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728
077 803 8193
(1050)


## இனவாத...

குறிப்பிட்டுள்ளார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த பிரதமர்,

எமது நாட்டில் முன்னர் இருந்த அரசியல் வடக்கு, தெற்கு, கிழக்கு மற்றும் மலையகத்திற்கென வெவ்வேறாக இருந்தது. அவர்கள் பிரதேசங்களுக்கு, இனங்களுக்கு என வெவ்வேறாகவே தமது அரசியல் கலாசாரத்தை முன்னெடுத்து வந்தனர்.

இதனூடாகவே ஊழல் நிறைந்த அரசியல் உருவானது. அரசியல் ரீதியாக நிர்க்கதியானவர்களின் தஞ்சம் இனவாதம்.

எனினும் நீங்கள் இன, மத பேதங்களைப் பின்தள்ளி எமது அரசாங்கத்தை ஆட்சிக்கு கொண்டு வந்தது குறித்த கலாசாரத்தை மாற்றுவதற்கே என எமக்கு தெரியும். இந்த நாட்டு மக்கள் முதற்தடவையாக கொள்கை மற்றும் நோக்கத்தை பார்த்து வாக்களித்துள்ளனர்.

நேற்றைய தினம் (நேற்று முன்தினம்) கிளிநொச்சி மாவட்டத்தில் பல்வேறு பொதுக் கூட்டங்களில் நான் பங்கேற்றிருந்தேன். அத்துடன் அங்கிருந்த சில வீடுகளுக்கும் சென்றிருந்தேன். குறித்த வீடுகளில் குறைந்தது ஒருவராவது வெளிநாடுகளுக்குச் சென்று குடும்பத்தை விட்டுப் பிரிந்துள்ளனர்.

தமது நாட்டில், தமக்குரிய ஊரில் இருந்துகொண்டு பொருளாதார ரீதியாக முன்னேறுவதற்கு வழி இல்லாமையே இதற்கு காரணமாகும். இவ்வளவு காலமும் கிராமக்கள் அபிவிருத்தியடையாமல் இருந்தமைக்கு காரணம் பிரதேச சபைகளுக்கு போதுமான நிதி கிடைக்காமை அல்ல.

மாறாக, ஆட்சியாளர்கள் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் உணர்வுபூர்வமாக செயற்படாமையே இதற்குக் காரணமாகும். தமது கிராமத்திற்குரிய அபிவிருத்திகளை மேற்கொள்வதற்கே பிரதேச சபைகள் உள்ளன.

கிராமிய வீதிகள், வடிகான் கட்டமைப்பு, முன்பள்ளிகள், பஸ் தரிப்பிடங்கள் போன்றவற்றை முன்னெடுத்துச் செல்வதற்கே பிரதேச சபைகள் உள்ளன. இவை மக்களின் அன்றாட வாழ்வியலுக்குத் தேவையானவை.

நாம் தேவைக்கு அதிகமாகத் துன்பங்களை அனுபவித்துள்ளோம். இவை அனைத்தும் இந்தத் தலைமுறையுடன் முடிவுக்கு வர வேண்டும். அடுத்த பரம்பரையினருக்கு அழகிய வளமான நாட்டை சொந்தமாக்கிக் கொடுப்பதே எமது இலக்காகுமென பிரதமர் தெரிவித்தார். (ம-4,7)


## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மானிப்பாய்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com
(C-2758)



## வைத்தியம்

வலிப்பு நோய் | கை விறைப்பு | நாட்பட்ட தலைவலி | மூலம் | கழுத்து வலி | கால் பாத விறைப்பு | முள்ளந்தண்டு வலி | முழங்கால், குதி வலி
Sciatica | Rheumatic Arthritis | நாட்பட்ட சளி
தலைக்கு இரத்தம் போகாமை, வாதம்
நம்பிக்கையான மூலிகை, Acu சிகிச்சைகள்
நல்லூர், யாழ்ப்பாணம்.
Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)
தொடர்புகளுக்கு : 0777 301 669
(1051)



## தேர்தல்...

ன்றில் மன்னார் பிரதேசத்தில் நடைபெற்ற மக்கள் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு, தேசிய மக்கள் சக்தியின் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு விசேடமாக நிதி ஒதுக்கீடு செய்வது குறித்து வெளியிட்ட கருத்துத் தொடர்பாக தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இதன்படி இந்த முறைப்பாடுகளை விசாரிப்பதற்காக ஆணைக்குழு இன்று கூடவுள்ளது.

எவ்வாறாயினும் தேசிய மக்கள் சக்தியின் கட்டுப்பாட்டில் இல்லாத உள்ளூராட்சி மன்றங்களுக்கான நிதி ஒதுக்கப்படாது என்று தான் ஒருபோதும் கூறவில்லையென ஜனாதிபதி அநுர குமார திஸா நாயக்க நேற்று முன்தினம் சனிக்கிழமை தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-4,7)

## மரண அறிவித்தல்



மலர்வு 26 - 01 - 1953

உதிர்வு 19 - 04 - 2025

### அந்தோனிப்பிள்ளை மரியராசநாயகம்

பருத்தித்துறை புலோலி வடக்கு ஊரியவத்தையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை மரியராசநாயகம் அவர்கள் 19.04.2025 சனிக்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை விக்ரோறியா தம்பதியினரின் ஏக புத்திரனும் காலஞ்சென்ற இராசறஞ்சினியின் அன்புக் கணவரும் அனல்தர்சன் (AO, Velummayilum Foundation), தனுசியா, அனல்றெஜி, அனல்ராஜ் (DECO ROSE) மற்றும் வினுசியா ஆகியோரின் பாசமிகு தந்தையும் மரியம்மா (Canada), காலஞ்சென்ற இராசாத்தி (Germany) மற்றும் லலிதா (Denmark) ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற அருளானந்தம் (Canada), இராசரத்தினம் (Germany), காலஞ்சென்ற மோகன் மற்றும் குமாரி, பாப்பா, ரவி, தங்கராசா (Denmark) ஆகியோரின் மைத்துனனும் அன்புவின் சகலனும் பேபி, ரோகினி ஆகியோரின் சகோதரனும் சசிகரன், பியர்லின், சிந்துஜா, சிவிதா, லெய்ரன் (Canada), ஜான்சி (Canada), லெசி (Canada), ஜானு, லோலி மற்றும் ஜயனி, சுகன்ராஜ், தனு, நிது, சுஜித்தன் ஆகியோரின் மாமனாரும் லியா, ஆதர்சன், ஜோஷ், ஜோஷ்னா, ஜொய்டன் ஆகியோரின் பேரனும் தீசன், லதுசியா, கனுசியா, நிகேஷ் ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று காலை 10.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு 10.30 மணியளவில் பருத்தித்துறை புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பின்னர் கோரியடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

077 434 9268, 077 869 3803,
077 807 1780

தகவல்:
குடும்பத்தினர்

(C-2755)


## Pearson International College



♦ இலங்கையில் முதன்முறையாக TESL தகைமையுடைய கனடா விரிவுரையாளர்கள் வழங்கும் கனடா அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட IELTS மற்றும் Diploma கற்கை நெறிகள்.
♦ கற்பித்தல் உங்களுக்கு திருப்திகரமானதாக இல்லையெனில் 100% money back Guarantee
♦ எம்மிடம் கல்வி கற்று Band 7 க்கு மேல் பெற்ற மாணவர்களின் பெறுபேறுகளை பார்த்து உறுதி செய்யுங்கள்.
♦ இப்போது யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவில் வட மாகாணத்தில் No. 1 IELTS Coaching

074 188 7878, 074 385 7584
www.picsl.lk
TESL CANADA
TESL Ontario
(1009)



## வேலையாட்கள் தேவை

கிளிநொச்சியில் உள்ள சைவ உணவகம் ஒன்றிற்கு பின்வரும் வேலைகளிற்கு (தேநீர் தயாரிப்பவர், ரொட்டி தயாரிப்பவர், பிரதான சமையலாளர், உணவு பரிமாறுபவர்) வேலை ஆட்கள் தேவை.

தொடர்புகளுக்கு : 077 523 0064
(1048)



எமது 50 வருட சேவையின் ஓர் அங்கமாக பொருளாதார வாழ்வியல் இடர்களுக்கு முகம் கொடுக்கும் குடும்பங்களுக்கு தமது இறுதி மரியாதையையும் கடமையையும் செய்யக்கூடிய வகையில்

## பரிபூரணம்

சேவையை நாம் எம் மக்களுக்காக ஆரம்பித்துள்ளோம். ரூபா 35,000/- முதல் இறுதிச் சடங்கிற்கு ஏற்ற மரப்பேழை, வாகனம், உடல் பதப்படுத்தல் மற்றும் இதர சேவைகளும் ஏற்றுக்கொள்ளப்படும்.

விபரங்களுக்கு : ஈ - சன்ஸ் அந்தியகால சேவை
இல.148, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2695, 077 429 0613
(C-2756)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.04.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org